பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | வைகாசி 23 | செவ்வாய்க்கிழமை | 06.06.2023 | கதிர் 208

## பல்லாயிரம் பக்தர்களுடன் வற்றாப்பளைப் பொங்கல்

### பக்திபூர்வமாகச் சிறப்புற்றது





(சண்முகம் தவசீலன்)

வரலாற்று சிறப்பு மிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உட்சவம் பல்லாயிரக்கணக்கான பக்தர்களுடன் நேற்றுத் தொடங்கி நடைபெற்று வருகிறது

முள்ளியவளை காட்டா விநாயகர்

☞2

# சீன நிறுவனம் உள்ளே வந்ததும் எரிபொருள் கோட்டா நீங்கும்



சீனாவின்சினோபெக்நிறுவனம்இலங்கையில் எரிபொருள் விநியோக நடவடிக்கைகளை ஆரம்பித்தவுடன் தற்போதைய எரிபொருள் கோட்டா முறைமையை நீக்குவதற்கு எதிர் பார்ப்பதாக மின்சக்தி - எரிசக்தி இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த இது தொடர்பிலல் கருத்து வெளியிடும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அண்மையில் விலைகளில் மாற்றங்களைச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர்கள் எரிபொருட்களை கொள்வனவு செய்திருக்கவில்லை. இதனால்தான் வரிசைகள் ஆரம்பமாகின. எனினும், அவற்றைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுத் தற்போது நிலைமைகள் சுமூகமாக்கப்பட்டுள்ளன. எனவே எந்தவகையிலும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது.

அதேநேரம், அடுத்துவரும் காலத்தில் சினோபெக் நிறுவனமும் எரிபொருட்களை விநியோக்க உள்ளமையால் நெருக்கடியான நிலைமைகள் ஏற்படாது - என்றார்.

## இனி இது ரகசியம் அல்ல!

தமிழர்கள் மத்தியில் சாதி பார்ப்பது ஒன்றும் புதிதில்லை. இந்தியாவில் பிராமணர் ஒருவர் மற்றொருவரைக் கட்டியணைத்து ஆரத் தழுவி வரவேற்கிறார் என் றால், அவர் முதுகில் பூணூல் தட்டுப்படுகின்றதா, அவர் தங்களவரா என்று தேடுகிறார் என அர்த்தம் என்பார்கள். அதுபோன்று மிக நுணுக்கமாக சாதியை அறிந்துகொள்வதிலும், நுட்பமாக சாதியை நிலைநிறுத்தி நடந்துகொள்வதிலும் வல்லவர்கள் தமிழர்கள். இங்கு அரசியல் கட்சிகள்கூட சாதிய அடிப்படையில்தான் செயற்படுகின்றன. சாதி வாக்குகளைப் பெறுவதற்காக தொகுதிகளில் சாதிய வேட்பாளர்களைத்தான் நிறுத்துகின்றன. எந்தத் தொகுதியில் எந்தச் சாதி வாக்குகள் அதிகம் உள்ளனவோ அந்தச்சாதி ஆள்தான் நிச்சயம் வேட்பாளராக எல்லாக் கட்சிகளாலுமே நிறுத்தப்படுவார். சாதியை மறுத்தோ அல்லது அதனை ஒழிப்போம் என்றோ இங்குள்ள தேசியக் கட்சியின் எந்தத் தலைவரும் வீறுகொண்டு எழமாட்டார். ஏனெனில் வாக்குகள் போய்விடும் என்கிற அச்சம். இதில் தாங்கள்தான் உண்மையான தமிழ்த் தேசியத்தின் ஆன்மா என்று சொல்லிக்கொள்கிற முன்னணிகூட விதிவிலக்கல்ல. அந்தக் கட்சியும் சாதி அடிப்படையில்தான் வேட்பாளர்களைத் தெரிவு செய்கிறது, வாக்குகளுக்காக.

இப்படிப்பட்டவர்கள் மத்தியில் சாதி பற்றி வெளிப்படையாக நடந்துகொண்டு மாட்டிக்கொண்டவர் முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன். அவர் முதலமைச்சராக இருந்த காலத்தில் சாதி பற்றி அவர் மேற்கொண்ட செயல்கள்,

☞2

## பொலிஸ் நிலையத்தில் ஆஜராகுமாறு கஜேந்திரகுமாருக்கு வந்தது அழைப்பு



யாழ்., வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி பொலிஸ்நிலையத்தில் இன்று செவ்வாய்க்கிழமை ஆஜராகுமாறு தனக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

நான் இன்று நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் கலந்துகொள்ளவுள்ளதால் இது குறித்து சபாநாயகருக்கு அறிவிப்பேன் எனப் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளேன்.

சபாநாயகரைத் தொடர்பு கொள்ள முயன்றேன்; எனினும், தொடர்புகொள்ள முடியவில்லை. பிரதி சபாநாயகருக்கு இது குறித்து அறிவித்துள்ளேன் - என்றும் கஜேந்திரகுமார் எம்.பி. மேலும் தெரிவித்துள்ளார். (02)

## ஒளிபரப்புச் சட்டமூலத்தினை எதிர்த்து நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்வோம்

### பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அறிவிப்பு



உத்தேச ஒளிபரப்பு ஒழுங்குப்படுத்தல் அதிகாரசபை சட்டமூலத்தை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்துவோமென சுதந்திர மக்கள் சபையின் பிரதிநிதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

நாவலவில் உள்ள சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார் அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஜனநாயகத்தை முன்னிலைப்படுத்திச் செயற்படும் இலங்கையில் ஜனநாயகத்தின் நான்காவது தூணாக ஊடகத்துறை கருதப்படுகிறது. அரசமைப்பின் 14 ஆவது அத்தியாயத்தில் பேச்சு சுதந்திரம் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. மனித உரிமைகளை பாதுகாக்கும் விசேட பொறிமுறையாக ஊடகம் காணப்படுகிறது. ஊடக துறையின் சுதந்திரத்தை வரையறை செய்து விட்டு மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகளை ஒருபோதும் பாதுகாக்க முடியாது.

உத்தேச ஒலி மற்றும் ஒளிபரப்பு ஒழுங்குப்படுத்தல் அதிகார சபை சட்டமூலத்தை சட்டமாக்க இடமளித்தால் ஊடகத்துறையின் சுதந்திரம் அத்துடன் நிறைவு பெறும். ஒலி மற்றும் ஒளிபரப்பு ஒழுங்குப்படுத்தல் அதிகார சபை என்பது ஒரு யோசனையே தவிர சட்ட மூலம் அல்ல என்று அரசாங்கம் குறிப்பிடுவது அடிப்படையற்றதாகும்.

☞2

## ஒளிபரப்புச் சட்டமூலத்திற்கு ஆதிவாசிகளும்கூட எதிர்ப்பு

ஊடகங்களுக்குத் தடை போடும் ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் சட்டமூலத்தை ஆதிவாசிகளும் விரும்பவில்லை என்று தபானை ஆதிவாசிகளின் தலைவர் வனஸ்பதி உருவரிகே வன்னில எத்தோ தெரிவித்தார்.

கண்டியில் வைத்து நேற்று செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைதத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலகில் எந்தவொரு நாட்டிலும் ஊடகங்கள் இருக்க வேண்டும். அவை சிறப்பாக செயற்பட வேண்டும். அவற்றின் ஊடாக நாடொன்றில் நிகழும் விடயங்கள் வெளிக்கொண்டு வரப்பட்டு நியாயத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால், ஊடகங்களின் சுதந்திரத்தினை தடைசெய்ய முயற்சித்தால் அது ஆட்சியாளர்களின் கட்டுப்பாட்டிலேயே இருக்கும். அப்போது மக்களின் சுத்திரம் அற்றுப்போகும். சிந்திக்கவும், உலகிற்கு கருத்து தெரிவிக்கவும் மக்களுக்கான அடிப்படைய உரிமைகள் அற்றுப்போகும் நிலையே ஏற்படும். ஆதிவாசிகள் கூட அத்தகைய ஊடகத்தடையை விரும்பவில்லை என்றார்.

## கஜேந்திரகுமார் எம்.பி. மீதும் குற்றச்சாட்டுக்கள் முன்வைப்பு

### கூறுகின்றார் பொலிஸ் பேச்சாளர்

மருதங்கேணியில் நாடாளுமன்ற உறுப்பினர் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியேட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்தூவ தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பொலிஸ் தலைமையகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:,

மருதங்கேணியில் சிலர் ஒன்று கூடுகின்றனர் என்று கிடைத்த தகவலை அடுத்து அங்கு சென்ற புலனாய்வுப் பிரிவினரிடத்தில் அடையாள அட்டையை கோரியுள்ளனர். அப்போது அடையாள அட்டை காண்பிக்கப்பட்டபோதும் அவர்களைத்

☞2

## இலங்கையில் இருந்து கடத்திச் சென்ற 5 கிலோ தங்கம் தமிழ்நாட்டில் சிக்கியது

### உச்சிப்புளி அருகே படகும் மாட்டியது



(ந.லோகதயாளன்)

இலங்கையில் இருந்து படகில் கடல் வழியாக தமிழ்நாட்டிற்குளடுத்துச்செல்லப்பட்ட தங்கம் தமிழ்நாடு உச்சிப்புளி கடல்ப் பகுதியில் தமிழ்நாடு சுங்கத்துறையினரால் கைப்பற்றிபட்டது.

இவ்வாறு தமிழகத்தில் கைப்பற்றப்பட்டுள்ள தங்கத்தின் பெறுமதி சுமார் 10 கோடி ரூபா எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் இருந்து நேற்று மாலை பகல்வேளையில் படகில்

☞2

## இலங்கை மீண்டெழுகிறது அமெரிக்கத் தூதுவர் கருத்து

இலங்கை மக்கள் மீண்டெழுகின்றனர் என்று இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

கொட்டக்கலையில் உள்ள தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்திற்குச் சென்ற அவர் அங்கு நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை மக்கள் மீண்டெழுக்கின்றனர். நுவரெலியா மற்றும் அதனை அண்மித்துள்ள மாவட்டங்களில் உள்ள மக்களுக்கு கடந்த காலங்களில் பல தடைகளும், சவால்களும் இருந்ததை நான் அறிவேன்.

இலங்கையில் உள்ள பெருந்தோட்ட மற்றும் மலையமக்களின் எதிர்காலப் பாதையை மாற்றுவதற்கான தருணமே இதுவாகும். இலங்கை கடினமானதொரு காலத்திற்கு முகங்கொடுத்திருந்த நிலையில் தற்போது வர்த்தகம், முதலீடுகளைக் கொண்டு வருவதற்கு எதிர்பார்க்கின்றோம்.

அமெரிக்காவிலுள்ள ஆட்சியும் இலங்கையிலுள்ள ஆட்சியும் ஒன்றாகச் செயற்படவேண்டும். உங்களுக்கு உதவுவதற்கும், உற்சாகப்படுத்துவதற்கும், பங்காளிகளாக ஒத்துழைப்பதற்கும் நாம் இங்கிருக் கின்றோம் - என்றார்.

## மருதங்கேணிச் சம்பவத்தை திசைதிருப்ப முழு முயற்சி

### கஜேந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

மருதங்கேணியில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தாக்கப்பட்ட வழக்கினை திசைதிருப்புவதற்கு முயற்சிக்கப்படுவதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஆட்சியாளர்கள் தங்களின் அராஜகத்தை மூடி மறைப்பதற்காக தற்போது வழக்கினை திசைதிருப்பும் நோக்கத்துடன் செயற்படத் தொடங்கியுள்ளார்கள்.

பொலிஸார் இன்றைய தினம் அதிகாலை (நேற்று) எமது கட்சியின் வடமராட்சி கிழக்கு அமைப்பாளர் ஜெகதீஸ்வரன் சற்குணதேவியினுடைய வீட்டுக்குச் சென்று அவரைக் கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச்சென்றுள்ளார்கள்.

பின்னர், அவசரஅவசரமாக அவரை நீதிமன்றத்தில் முற்படுத்தி விளக்கமறியலுக்கான உத்தரவைப் பெற்றுள்ளார்கள். சற்குண தேவியைப் பொறுத்தவரையில் அவர் பொலிஸாருடன் முரண்படவில்லை.

அதற்கு நேரில் கண்ட பல சாட்சிகள் உள்ளன. அவ்வாறு இருக்கையில் அவரை கைது செய்தையை நாம் வன்மையாகக் கண்டிருக்கின்றோம். இது ஒட்டுமொத்தமான ஜனநாயகத்திற்கும் விடுக்கப்படுகின்ற அச்சுறுத்தலாகவே கருதுகின்றோம் -என்றார்.

## இந்திய இராணுவத்தால் நிகழ்த்தப்பட்ட வாதரவத்தைப் படுகொலையின் 33ஆவது நினைவேந்தல் நேற்று



இந்திய அமைதிப்படையால் படுகொலை செய்யப்பட்ட பொது மக்களை 33 ஆண்டுகளின் பின்னர் நினைவுகூரும் நினைவேந்தல் யாழ்ப்பாணம் புத்தூர் வாதரவத்தையில் நேற்று மாலை இடம் பெற்றது.

1987 ஆம் ஆண்டு இதே நாளில் வாதரவத்தைப் பகுதியில் இந்திய அமைதிப்படையினரால் ஒன்பது பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இறந்த பொது மக்களை நினைவுகூருவதற்கு கடந்த காலங்களில் காணப்பட்ட அச்சம் காரணமாக அது நடைபெறவில்லை. இன்றைய தினம் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் இளையகுட்டி பரஞ்சோதியின் தலைமையில் இறந்தவர்களின் உடைக்கப்பட்ட நினைவு தூபிக்கு அருகில் நினைவேந்தல் இடம் பெற்றது.

அமைதிப்படையால் படுகொலை செய்யப்பட்டவர்கள் நினைவாக தேரம் பிள்ளையார் ஆலயத்தில் மோட்ச அர்ச்சனை செய்யப்பட்டது.


படுகொலை செய்யப்பட்டவர்களின் பிள்ளைகள், உறவினர்கள் நினைவுச் சுடர் ஏற்றி கண்ணீர் மல்க மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த வடக்கு மாகாண சபை முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன் -

இந்திய அமைதிப்படை என்ற பெயரில் இலங்கைக்கு வந்த இந்திய இராணுவம் பல்வேறு இடங்களில்

☞2

## யாழில் கைக்குண்டுடன் குடும்பஸ்தர் சிக்கினார்



யாழ்ப்பாணம், கொழும்புத்துறையில் கைக்குண்டுடன் குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்புத்துறை பகுதியில் வசிக்கும் குறித்த நபர் சனியிரவு மதுபோதையில் தனது வீட்டில் இருந்து பெரிய சத்தமாக தகாத வார்த்தைகளால் கத்தி பெரும் அட்டகாசம் புரிந்துள்ளார்.

அதனால் பொறுமை இழந்த அயலவர்கள் பொலிஸ் அவசர சேவைக்கு அறிவித்ததை அடுத்து, அவரது வீட்டுக்குச் சென்ற பொலிஸார் அவரை வீட்டினுள் தேடிய வேளை அங்கே கைக்குண்டு ஒன்று இருப்பதை அவதானித்துள்ளனர்.

அதையடுத்து கைக்குண்டை மீட்ட பொலிஸார், வீட்டில் மறைந்திருந்த நபரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (02)

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அவருடையகர்மவினையாக மீண்டும் மீண்டும் அவரைச் சுற்றிச் சுற்றி வந்தபடியே இருக்கின்றன. அண்மையில் அவரது கட்சியைச் சேர்ந்த ஒருவரே அவரது சாதிய நிலைப்பாட்டுக்கு எதிராக பகிரங்க மடல் ஒன்றை வரைந்துவிட்டு கட்சிப் பதவியையும் தூக்கிக் கடாசி இருந்தார். அந்தக் கடிதம் உட்பட அண்மைக்கால செய்திகள்பலவும்முதலமைச்சர் ஒரு சாதி வெறியர் என்று காட்டுமளவிற்கு இருந்தன. ஆனால் பக்குவமாக அதற்கொரு பதில் தந்திருந்தார் விக்னேஸ்வரன். அவரது பதில்கடந்த முதலாம்திகதியே எனக்குக்கிடைத்துவிட்டாலும் இந்தப்பத்தியில்வேறு முக்கிய விடயங்கள் குறித்து அலச வேண்டியிருந்ததால் அந்தப் பதிலைத் தர முடியாமல் போய்விட்டது. முதலமைச்சரின் சாதி வெறி யைக் காண் பிக்கக் கொடுத்த முக்கியத்துவம் அதற்கு அவர் அளித்த பதிலுக்கு ஊடகங்களால் வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை. எனவே அந்தப் பதிலை அப்படியே இங்கு முழுமையாகத் தருகின்றேன்.

அன்புள்ள சுதா (சுதா தனபாலசிங்கம்) அறிவது!

உங்கள் வலைத்தள திறந்த மடல் எனக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. வாசித்தேன்.

தமிழ் மக்கள் வாழ்வில் அதுவும் வடமாகாணத் தமிழ் மக்கள் வாழ்கில் சாதியவேற்றுமைகள்இன்றும் நிலவுகின்றன. ஆனால் அது வெளிப்படையாகப் பேசப்படுவதில்லை.

குறிப்பிட்ட சூழலில் பிறந்து வளர்ந்தவர்கள் அது பற்றிப் போதிய அறிவைப் பெற்றிருப்பார்கள். அவ்வாறானசூழலில்இருந்து விடுபட்டு வாழ்ந்த ஒருவருக்கு அதன் தாற்பரியம் விளங்காது என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

கொழும்பில் பிறந்து வளர்ந்த எனக்கு சாதி பற்றி எதுவும் தெரியாது இருந்தது. அதனால்தான் இன்று வரையும் ''நீங்கள்'' என்று பன்மையில் எவரையும் விளித்து வருகின்றேன். நண்பர்களுக்கு இடையேயும் மிகவும்கிட்டியஉறவுகளுக்கு இடையேயும் தான் நான் ''நீ'' என்றஒருமையைப்பாவித்து வருகின்றேன். எவரையும் மனிதர்களாகமதித்துவாழ்ந்து வருகின்றேன்.

எங்கள்தாய்தந்தையரை அவர்களது பாரம்பரியத்தை மாற்ற முடியாது. ஆனால் வெவ்வேறு சாதிகளில் பிறந்தவர்கள் சகோதரத்துவத்துடன் வாழலாம். அருந்தவபாலனுடனும்ஐங்கரநேசனுடனும் அவர்களின் சிறப்பியல்புகளைக் கண்டு அவற்றின் அடிப்படையிலேயே அவர்களை மதித்து நட்புப் பாராட்டி வந்தேன். அவர்களின்சாதிபற்றிஎனக்கு எதுவுமே தெரிந்திருக்கவில்லை. தெரிந்திருக்கவேண்டிய அவசியமும் இருந்ததில்லை.

இங்கு பிறந்து வளர்ந்தவர்களுக்குபலகாரணங்களின் நிமித்தம்ஒருவரின்சாதிபற்றிப் போதுமானதாகத் தெரிந்திருக்கிறது. ஆனால் எனக்கு அவ்வாறு இல்லை. தெரியாததைத் தெரிந்துகொள்ள முற்பட்டதால்தான் உங்களின் வசை மொழிக்கு ஆளாகியுள்ளேன். சாதி வேற்றுமைகளை நான் என்றும் பாராட்டியதில்லை. அது பற்றி எனக்குப் போதிய அறிவும் இல்லை. ஆனால் எமது குடும்பப் பாரம்பரியம் பற்றி பெற்றோர்களாலும் மற்றோர்களாலும் கூறப்பட்டது. அவற்றை வரலாறு படிப்பது போன்று உள்வாங்கினேன்.

முதலமைச்சராக இருந்த போது தகுதி அடிப்படையிலேயே பொறுப்புக்களைப் பல்வேறு தரப்பினருக்கும் ஒப்படைத்தேனே தவிர, அவர்களின் சாதி பார்த்தல்ல.

மனிதநேயம், மனிதாபினமானம்,மனிதஉரிமைகளைப் பாதுகாக்க விளையும் மனம் என்பன எமது மனிதத்துவசிந்தனையில்இருந்து வெளிவருவன. வாக்குகள் எடுக்க, நிதி சேகரிக்க, பொய்யானமனிதத்துவத்தைவெளிப்படுத்தவேண்டிய அவசியம் எனக்கு எப்பொழுதும் இருந்ததில்லை. என் மாணவர்களைக்கூட சமமாகவே மதித்து நட்புப்பாராட்டிவந்துள்ளேன்.

உங்கள் மீது நட்புப் பாராட்டுகின்றேன் என்றால் நீங்கள் எமக்குச் செய்த உதவிகளைச் சேவைகளை மறந்துவிடவில்லைஎன்பதே அர்த்தம்.

நாம் பரஸ்பரம் நட்பு ரீதியாக இணைந்து செல்லும் வாழ்க்கையில் சாதியத்தைக் கொண்டு வந்து புகுத்துவது அழகல்ல. எத்தனையோ வருடங்களுக்கு முன்னர் நண்பர்களுக்கு இடையில் பரிமாற்றம் பெற்ற விடயம் இப்பொழுது மிகக் காரசாரமாக விவாதிக்கப்படுகின்றது என்றால் இதன் பின்னால் யார் இருக்கின்றார்கள், ஏன் இவ்வாறான ஒரு நிலையை ஏற்படுத்துகின்றார்கள் என்பதைப் பற்றி நீங்கள்தான் ஆராய்ந்து அறியவேண்டும்.

நான்நினையாதவற்றை என்மேல் திணிப்பது எனக்கு வியப்பையே ஊட்டுகின்றது. நான் ஔவையாரின்,

சாதி இரண்டொழிய
வேறில்லை சாற்றுங்கால்
நீதிவழுவா நெறிமுறையில்
இட்டார் பெரியோர்
இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ளபடி''

என்றபாடலின்அடிப்படையில் வாழ்ந்தவன், வாழ்பவன். இடும் சாதிதான் நான். எனது அறிவை, ஆற்றலை, அன்பை ஆஸ்தியை மற்றவர்களுடன் பகிர்ந்துகொண்டே வாழ்ந்து வருகின்றேன்.

எமக்கு ஆஸ்திரேலியாவில்இருந்துநீங்கள்உதவிகள் செய்துஇட்டபடியால்நீங்களும் இடும்சாதிதான். நாங்கள்இடும் சாதியாகவே இருப்போம். இடாது இழிகுலத்தோராக மாறாது பார்த்துக்கொள்வோம்.

உங்கள் கட்சியின் செயலாளர் நாயகம் நீங்கள் எதிர்பார்க்கும்குணவியல்புகள் கொண்டவர் என்பதைக் கூறித் தொடர்ந்து கட்சியின் பொறுப்புக்களைத் தாங்கிச் செயலாற்றுமாறு உங்களிடம் வினயமாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

நீங்கள் எதிர்பார்க்கும் புதிய செயலாளர் நாயகம் பதவிக்கு வரும்போது அவருடனும்சேர்ந்துபயணிப்பீர்களாக! நீங்கள் எம்முடன் பேசாது பகிரங்க கடிதத்தை ஊடகங்களுக்கு அனுப்பினீர்கள்.எது பதிலையும் அவ்வாறே அனுப்புவீர்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

நன்றி

- என்றுள்ளது.

முதலமைச்சர் இந்தப் பதிலின் மூலம் தான் சாதி பார்ப்பதில்லை என்பதைத்தான் திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள். பிறப்பால் எல்லா உயிர்களும் ஒன்றுதான் என்றுசொன்னவன்தமிழன். யாதும்ஊரே யாவரும்கேளிர் என்றவன். அவன் சாதி பார்த்தான்,சாதிஇருந்ததுஇருக்கிறது என்பதெல்லாம் அபத்தம். சாதியில்லைஎன்றுபிரகடனம் செய்யவேண்டிய முதலமைச்சர் சாதி இருக்கிறது ஆனால் நான் பார்ப்பதில்லை என்று சொல்லியிருப்பதன் மூலம் மீண்டும் சறுக்கியிருக்கிறார். என்ன செய்வது இதுதான் தமிழரின்அரசியல்தலைவிதி, ஏனெனில் தமிழர்கள் சாதி பார்ப்பவர்கள்தானே!

- இடிமின்னல் -

## பல்லாயிரம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஆலயபொங்கல்நிகழ்வுநேற்று அதிகாலை நிறைவடைந்ததும். அங்கிருந்துமடப்பண்டம் எடுத்துவரப்பட்டுவற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்தபொங்கல்உட்சவம் தொடங்கப்பட்டது.

காலை பூசையிலேயே அதிகளவானபக்தர்கள்கலந்து கொண்டனர். தூக்கு காவடி, பறவைக் காவடி, பால்செம்பு, தீச்சட்டி, உள்ளிட்ட நேர்த்திக் கடன்களை மக்கள் மேற்கொண்டுவருகின்றனர்கடந்த ஆண்டுகளில் ஆலயத்துக்கு பக்தர்கள் வருகை தருவதில் இருந்த சிக்கல் நிலமைகள் காணமாக இம்முறை அதிகளவான பக்தர்கள் கலந்து கொண்டுநேர்த்திக்கடன்களை நிறைவேற்றி வருகின்றனர்

ஆலயத்துக்கு விசேட போக்குவரத்து சேவைகள் இடம்பெறுவதோடு சுமார் 700 வரையான பொலிசார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## ஒளிபரப்புச் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தனியார்மற்றும்சமூகஊடகங்களை இலக்காகக் கொண்டு உத்தேச சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச ஒலி மற்றும் ஒளிப்பரப்பு ஒழுங்குப்படுத்தல் அதிகார சபை சட்டமூலத்தில் 37சட்ட அத்தியாயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

நாட்டின் ஊடக சுதந்திரம் இந்த சட்டமூலத்தின் ஊடாக மறுசீரமைக்கப்பட்டுள்ளது.பிரபல்யமான ஊடக நிறுவனங்களில் பெரும்பாலானவை தனியார் தரப்புக்கு சொந்தமானது.

ஊடகங்கள் நாட்டு மக்களுக்கு அளப்பரிய சேவையாற்றியுள்ளன. ஆட்சியாளர்களின் முறைகேடான செயற்பாடுகளை ஊடகங்களே வெளிக்கொண்டு வருகின்றன. நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டங்கள் ஊடாகவே ஊடகங்களுக்கு அனுமதி பத்திரம் வழங்கப்பட்டுள்ளன. 1966ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டங்களுக்கு அமைய ஊடகங்கள் இதுவரை வினைத்திற்காக செயற்படுகின்றன.

உத்தேச ஒலி மற்றும் ஒளிபரப்பு ஒழுங்குப்படுத்தல் அதிகார சபை சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் ஊடகங்கள், சமூக வலைத்தளங்கள் ஆகியவற்றின் சுதந்திரம் முழுமையாக மாற்றியமைக்கப்படும்.

இந்த சட்டமூலம் நிறை வேற்றப்பட்டு ஆறு மாதகாலத்துக்கு பின்னர் ஊடகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதி பத்திரம் முழுமையாக இரத்து செய்யப்படும்.

அனுமதி பத்திரம் இரத்து செய்யப்பட்டதை தொடர்ந்து குறித்த ஊடகம் செயற்படுமாயின் அது சட்டத்துக்கு விரோத செயற்படாக கருதப்படும்.அரசாங்கத்தின் அனுமதி இல்லாமல் ஊடகங்களுக்கு செயற்பட முடியாது.

இந்த சட்டம் இயற்றப்பட்டு மூன்று மாத காலத்துக்குள் மீண்டும் பதிவுசெய்ய விண்ணப்பிக்க வேண்டும். அரஷசின் கண்காணிப்பின் பின்னரே அனுமதிப் பத்திரம் வழங்கப்படும். ஒருவருட காலத்தை வரையறுத்த வகையில் மாத்திரம் அனுமதி பத்திரம் வழங்கப்படும்.

அனுமதி பத்திரத்தை புதுப்பிக்க ஒன்பது மாதத்துக்கு பின்னர் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டும். அனுமதிவழங்கவேண்டுமா? இல்லையா என்பதை உத்தேசிக்கப்பட்டுள்ள அதிகார சபையேதீர்மானிக்க முடியும். அரசாங்கத்துக்கு சார்பாக செயற்படும் ஊடகங் களுக்கு மாத்திரமே அவ்வாறா யின் அனுமதி பத்திரம் வழங்கப்படும். இதுவா ஜனநாயகம்?.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெயரளவில் மாத்திரமே ஜனநாயகத்தை பாதுகாப்பார். மறைமுகமான வகையில் ஜனநாயகத்துக்கு எதிராகவே செயற்படுவார்.

உத்தேச ஒலி மற்றும் ஒளிபரப்பு ஒழுங்குப்படுத்தல் அதிகார சபை சட்டமூலம் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டவுடன் நீதிமன்றத்தை நாடுவோம் - என்றார்.

## இலங்கையில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) எடுத்துச் செல்லப்பட்டு நடுக்கடலில் கைமாறி இந்தத் தங்கம் தமிழ்நாடு வருகின்றது எனத் தகவல் அறிந்த சுங்கத்துறையினர் கடலில் காத்திருந்தனர். அச்சமயம் ஓர் படகு சந்தேகத்திற்கு இடமாக பயணித்த சமயம் வழி மறித்தபோதும் நிறித்தாமல் வேகமாகச் சென்றதனால் படகு சேதமடைந்தபோதும் உச்சிப்புளியை அண்டிய கடற்கரையை அடைந்த சமயம் தமிழக சுங்கத் துறையினரும் விடாமல விரட்டிச் சென்று பிடித்தனர். .

படகை கைப்பற்றிய தமிழ்நாடு சுங்கத்துறை அதிகாரிகள் படகில் தேடுதல் செய்த சமயம் அதில் இருந்து 5 கிலோ தங்கத்தை மீட்டனர். ஆனால் சந்தேகநபர்கள் தப்பியோடியவிட்டனர்.

.இதேநேரம் கடந்த தினங்களின் முன்பு 32 கிலோ தங்கம்தமிழகத்தில்அகப்பட்ட நிலையிலும் இங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

## கஜேந்திரகுமார் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தடுத்து வைப்பதற்கு அரசியல் தரப்பினர்முனைந்தமையால் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் பொலிஸாரின் செயற்பாடுகளுக்கு தடைகளை ஏற்படுத்தியவர்களைச் சரியாக அடையாளம் கண்டுஅவர்களைகைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கபபட்டு வருகின்றன. சம்பவத்துடன் தொடர்புடைய நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் ஏனையவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதேநேரம், நாடாளுமன்ற உறுப்பினர் அந்தப் பகுதிக்குவருகைதரவுள்ளதாக அப்பிரதேசத்துக்கு பொறுப்பான பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கவில்லை.

அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினரும் மெய்ப்பாதுகாவலர்கள் இன்றியே வருகை தந்துள்ளார். அந்தச் சந்தர்ப்பத்தில் அப்பகுதிக்கான பாதுகாப்பினை வழங்குவது பொலிஸாரின் பொறுப்பாகும். அச்செயற்பாடுகளையேபொலிஸார் மேற்கொண்டனர் - என்றார்.

## வாதரவத்தைப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பொதுமக்களை படுகொலை செய்திருந்தது. ஆனால் இவ்வாறான படுகொலைக்கு இன்றுவரையும் இந்திய அரசாங்கம் எவ்வித மன்னிப்பும் கோரவில்லை - என்று தெரிவித்தார்.

தமிழ் மக்களாகிய நாம் இன்றும் ஏதிலிகளாகவே இருந்து வருகிறோம், இவ்வாறு படுகொலை செய்யப்பட்டவர்களுக்காக அமைக்கப்பட்டு போரின் போது உடைக்கப்பட்ட நினைவுத் தூவியை விரைவில் அமைத்து அவர்களை நினைவு கூருவதற்கு வழி செய்ய வேண்டும் என்றும் இதன் போது கேட்டுக்கொண்டார்.O3









காலைக்கதிர் Kalaikkathir

# மட்டக்களப்பு அபிவிருத்தி தொடர்பாக ஆராய்ந்த மாவட்ட ஒருங்கிணைப்புகுழு



மட்டக்களப்பு, ஜூன் 06

கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும், மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான சிவ.சந்திரகாந்தன் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று (திங்கட்கிழமை) மே மாத மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

கிழக்கு மாகாண ஆளுநரும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் இணைத்தலைவருமான செந்தில் தொண்டமான், வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரன், இரா. சாணக்கியன் போன்ற அரசியல் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

குறிப்பாக இந்த மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் இவ் வாண்டு நடைமுறைப்படுத்துவதற்காக முன்மொழியப்பட்டுள்ள திட்டங்களுக்கான அனுமதியை வழங்குவது தொடர்பாகவும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

மேலும் மட்டக்களப்பு மாவட்டத்தின் விவசாயம், நீர்ப்பாசனம், கல்வி, சுகாதாரம், சுற்றாடல் உட்பட அனைத்து திணைக்களங்கள் சார் விடயங்களும் ஆராயப்பட்டு அவற்றில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்பாகவும் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது.

அத்தோடு மாவட்டத்தின் மேச்சல் தரை மற்றும் மகாவலி தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன் அவற்றுக்கான தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கான கலந்துரையாடல் ஒன்றை எதிர்வரும் 26 ஆந் திகதி நிகழ்த்துவதற்கான தீர்மானமும் எட்டப்பட்டிருந்தது.

குறித்த ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநரின் பணிக்குழுவினர் உள்ளிட்ட உயரதிகாரிகள், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திருமதி நவரூபரஞ்ஜனி முகுந்தன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சசிகலா புண்ணியமூர்த்தி, மாவட்ட பொலிஸ் உயரதிகாரிகள் மற்றும் பிரதேச செயலாளர்கள், ஏனைய திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட திணைக்களங்கள் சார் உயரதிகாரிகள் என பலரும் இதன்போது கலந்துகொண்டனர். (05)

# ஜூலி சங் மலையகத்துக்கு விஜயம் மக்களின் நெருக்கடி குறித்து ஆய்வு



மலையகத்துக்குவிஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அங்கு மக்களைச்சந்தித்து அவர்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார அரசியல் நெருக்கடிகள் தொடர்பா கக் கருத்துக்களைக் கேட்டறிந்துள்ளார்.

நான் மலையகத்தில் அந்த மக்கள் எதிர்கொள்ளும் பொருளாதார அரசியல் இடையூறுகள், சிறந்த வீடு கல்வி தங்கள் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கான வாய்ப்புகள் தொடர்பாகக் கேட்டறிவதற்காக அந்த பகுதி குடும்பங்களைசந்தித்தேன்(இவர்களில்பலருக்கு 200 வருட காலவரலாற்றை அந்தபகுதியுடன் தொடர்புள்ளது) என ஜூலி சங் தனது ருவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார். மகளிர் அமைப்புகளை சேர்ந்த சிறியளவு விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களை சந்தித்தேன். அவர்கள் தாங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் உள்நாட்டு பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கான பயிற்சிகள் தொடர்பாகத் தெரிவித்தார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)

# சீன அரசால் வழங்கப்பட்டுள்ள மண்ணெண்ணெய் மன்னார் மீனவர்களுக்கு முதல் கட்டம் வழங்கல்



சீனஅரசாங்கத்தால்வழங்கப்பட்ட மீனவர்களுக்கான மண்ணெண்ணை மானிய அடிப்படையிலானது நேற்று (திங்கட்கிழமை) மன்னார் மாவட்ட மீனவர்களுக்கு வைபவரீதியாக மன்னார் தனியார் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வைத்து பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளது.


மன்னார் மாவட்டத்தில் 2431 மீனவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில் முதல் கட்டமாக மீனவர்களுக்கு 75 லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் நகர மீனவர்களுக்கு மன்னாரில் உள்ள தனியார் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட கடற்தொழில் திணைக்கள உதவி பணிப்பாளர் ஏ.கலிஸ்ரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமேல், அமைச்சர் டக்ளஸ் தேவானந் தாவின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் எஸ்.சந்துரு உட்பட பலர் கலந்துகொண்டனர்.

மீனவர் ஒருவருக்கு 150 லீற்றர் மண்ணெண்ணெய் மானியமாக வழங்கப்பட உள்ள நிலையில் முதற்கட்டமாக மன்னார் நகர மீனவர்களுக்கு 75 லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# கோயில் திருவிழாவின்போது பூசகர் தீயில் சிக்கி உயிரிழப்பு



அகலவத்தை தென்னஹேன முத்துமாரி அம்மன் கோயில் வருடாந்த திருவிழா வின் போது பூசகர் ஒருவர் உடலில் பலத்த தீக்காயங்களுக்குஉள்ளாகிவைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார் என அகலவத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

இங்கிரிய பிரதேசத்தில் உள்ள ஆலயம் ஒன்றின் பூசகரான 44 வயதுடைய குருக்களே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

இறந்த பூசாரி கோவில் திருவிழாவில் தீபம் ஏற்றி நடனமாடிக் கொண்டிருந்தார். இதன்போதே அவர் அணிந்திருந்த ஆடையில் தீப்பிடித்து உடல் முழுவதும் பரவியதாகப் பொலிஸார் கூறுகின்றனர். (05)



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தங்கக் கடத்தலை முறியடிக்கவேண்டும்

இந்தியாவின் தெற்குக் கரையில் தமிழ்நாட்டில் நேற்றும் தங்கம் பிடிபட்டிருக்கின்றது. இலங்கையில் இருந்து கடத்திச் செல்லப்பட்டது என்று தெரிவிக்கப் படும் 5 கிலோ தங்கம் பிடிபட்டிருக்கின்றது. இப்படிக் கடத்தப்படும் தங்கம் பிடிபடுவது இது முதற்றடவை–யல்ல. இதற்கு முன்னரும் பல தடவைகள் இவ்வாறு தங்கம் பிடிபட்டிருக்கின்றது.

சில நாட்களுக்கு முன்னர்தான் இராமேஸ்வரத்தில் 32 கிலோ தங்கம் சுங்கத்துறை மற்றும் கடலோரக் காவற்படை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டது. கடத்தல்காரர்களால் கடலில் வீசப்பட்ட இந்தத் தங்கத்தை அதிகாரிகள் சுழியோடிகளை வைத்து மீட்டெடுத்தனர். கடந்த சில மாதங்களுக்குள் இப்படி இந்திய அதிகாரிகள் பெருந்தொகைத் தங்கத்தைக் கடலில் கைப்பற்றியது இது இரண்டாவது தடவை. இதற்கு முன்னரும் இதுபோன்றே சுழியோடிகளின் உதவியுடன் 20 கிலோவிற்கும் மேற்பட்ட தங்கத்தை அதிகாரிகள் கைப்பற்றியிருந்தனர்.

சில தினங்களுக்கு முன்னர் கைப்பற்றப்பட்ட தங்கம் இந்தியாவீல் இருந்து இலங்கைக்குக் கடத்த முற்பட்டது என்று இந்திய அதிகாரிகள் கூறினர். அதற்கு முன்னர் கைப்பற்றப்பட்ட பெருந்தொகைத் தங்கம் இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு எடுத்துச் செல்லப்பட்டது என்கின்றனர். நேற்றுக் கைப்பற்றப்பட்டதும் இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு எடுத்துச் செல்லப்பட்டது என்கின்றனர்.

அண்மைக் காலமாக இவ்வாறு இந்தியக் கடலில் அல்லது கரையோரத்தில் தங்கம் கைப்பற்றப்படுகின்றபோதும் அவை இலங்கைக்கு அல்லது இலங்கையிலிருந்து கடத்தப்படுகின்றபோதும் இலங்கைக் கடற்படையினராலோ இலங்கைச் சுங்க அதிகாரிகளாலோ இந்தத் தங்கத்தில் சிறிதளவுகூட இங்கு கைப்பற்றப்படவில்லை என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். பல் ஆண்டுகளுக்கு முன்னர் சில தடவைகள் இப்படி வடக்கிலும் கடத்தல் தங்கம் சிறிய அளவில் பிடிக்கப்பட்டிருக்கின்றது என்றபோதும் கடந்த பல வருடங்களாக அப்படி எவையும் பிடிபடவில்லை.

அண்மையில் மொட்டுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரகீம் ஏழரைக் கோடி ரூபாய் பெறுமதியான தங்கத்தோடு கட்டுநாயக்கா பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் பிடிபட்டிருந்தார். ஆக, துபாயிலிருந்து குறைந்த விலையில் தங்கத்தைக் கடத்தி வந்து அதனை இந்தியாவிற்கு மீண்டும் கடல் மார்க்கமாகக் கடத்துகின்றார்கள் என்கிற முடிவுக்கு வருவதற்கு போதுமான வாய்ப்புக்கள் இருக்கின்றன. ஆனால், இந்தியாவில் இருந்து இலங்கைக்கு தங்கம் ஏன் கடத்தப்படுகின்றது என்பதற்கான விளக்கம் இல்லை.

எது எப்படியிருந்தாலும் கஞ்சா மற்றும் போதைப் பொருட்களுக்கானபரிமாற்றவிநியோகமையமாகமட்டும் இலங்கை உருவாகவில்லை, தங்கக் கடத்தலுக்கான மையமாகவும் இலங்கை உருவாகியிருக்கிறது என்பது வெளிப்படையானது. இதனைத் தடுக்க அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம். இல்லையேல் இலங்கை முழுவதும் குறிப்பாக வடபகுதி முழுவதும் கடத்தல் சாம்ராஜயமாகவே மாறிவிடும் அபாயம் எதிர்காலத்தில் தோன்றும். அதற்கு ஒருபோதும் இடமளிக்கக்கூடாது.

நாட்டுக்கு மிகப்பெரும் வருமான இழப்பை ஏற்படுத்தும் தங்கக் கடத்தலைத் தடுப்பதில் கடற்படையினரும் தீவிர கவனம் செலுத்தவேண்டும். அந்த நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவதன் மூலம் இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறும் இந்திய மீனவர்களையும் கட்டுப்படுத்த முடிவதாக இருக்கும்.

# கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் உலக சுற்றாடல் தினம் அனுஷ்டிப்பு





கிளிநொச்சி, ஜூன் 06

ஐக்கிய நாடுகள் சபையால் 1974 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வோரு ஆண்டும் ஜூன் மாதம் 5 ஆம் திகதி உலக சுற்றுச்சூழல் பாதுகாப்பு தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

நடப்பாண்டுக்கான சுற்றுச்சூழல் பாதுகாப்புதினத்துக்கானகருப்பொருளாக பிளாஸ்ரிக் மாசுபாட்டிலிருந்து இயற்கையையும் எம்மையும் பாதுகாப்போம் என்பதாகும்.

அந்தவகையில் உலக சுற்றுச்சூழல் பாதுகாப்புதினத்தை முன்னிட்டு நாட்டின் பல பாகங்களிலும் சூழல் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில், சுற்றுச் சூழல் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் விழிப்புணர்வு கருத்தமர்வு மற்றும் பிளாஸ்ரிக் கழிவகற்றல் சிரமதான நிகழ்வு நேற்று (திங்கட்கிழமை) மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது வாராந்த முதல்நாள் ஒன்றுகூடலைத் தொடர்ந்து நடப்பாண்டுக்கான சுற்றுச் சூழல் தினத்தில் பிளாஸ்ரிக் பாவனையிலிருந்து விடுபடுதலின் முக்கியத்துவம் தொடர்பாக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கேதீஸ்வரன் உரையாற்றியிருந்தார்.

தொடர்ந்து மாவட்ட செயலக வளாகத்தில் காணப்பட்ட பிளாஸ்ரிக் கழிவுகளை அகற்றும் பணியில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் ஈடுபட்டனர்.

இந் நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர்(காணி) மற்றும் மாவட்டச்செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், கிளைத்தலைவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

1972 ஆண்டு சுவீடன் தலைநகரான ஸ்ரொக்ஹோமில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனிதக் குடியிருப்பும், சுற்றுச்சூழலும் என்ற வரலாற்று முக்கி யத்துவம் வாய்ந்த உலக மாநாடு நடைபெற்றது. சுற்றுச்சூழல் பாதுகாப்பின் அவசநிலை கருதி, ஜூன் 5 ஆம் திகதி உலக சுற்றுச்சூழல் தினமாக அறிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதன்பின்னர், ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட கருப்பொருளின் அடிப்படையில் சுற்றுச்சூழல் தினம் கொண்டாடப்படுகிறது. அதற்கேற்ப இளைஞர்களும், குழுக்களும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களும், தொழில் வர்த்தக ஊடக அமைப்புகளும், சுற்றுச்சூழலை மேம்படுத்தி அதைப் பாதுகாப்பதில் தங்களின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தும் விதமாக நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக 2023 ஆண்டு ஜூன் 5, சுற்றுசூழல் தினத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.

குறிப்பாக ஆண்டு ஒன்றுக்கு 400 மில்லியன் தொன் பிளாஸ்டிக் உலக அளவில் தயாரிக்கப்படுகின்றன எனவும் இதில் அரை பங்கு ஒரு முறை மட்டுமே பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் ஆகும். மொத்த பிளாஸ்டிக் உற்பத்தியில் 10 வீதம் கூட மறுசுழற்சி செய்யப்படுவதில்லை. இதன் விளைவாக ஆறு, ஏரி , குளம், சதுப்பு நிலங்கள் என வகைதொகை இல்லாமல் எங்கும் மக்காத பிளாஸ்டிக் குப்பைகள் நிறைந்துள்ளன. இதற்கு அறிவியலின் துணையோடு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்பதே இந்த 2023 உலக சுற்றுச்சூழல் தினத்தின் நோக்கம் ஆகும். (05 - 113)



# டெங்கைக் கட்டுப்படுத்த மட்டக்களப்பில் கலந்தாய்வு!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக் காலமாக டெங்கின் தாக்கம் அதிகரித்துச் செல்வதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜி.சுகுணன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் டெங்கின் தாக்கம் தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடல் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்றது. அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு -


தற்போது டெங்கு தொடர்பான தாக்கம் மட்டக்களப்பின் கொக்குவில், சின்ன ஊறணி, வெட்டுக்காடு, இருதயபுரம் ஆகிய பகுதிகளில் அதிகளவில் காணப்படுகிறது. - என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த், மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார், மட்டக்களப்பு மேற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். மஹேந்திரகுமார், திணைக்களத் தலைவர்கள், பொலிஸ் உயர் அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (05)

# கிழக்கு ஆளுநருக்கு கமல்ஹாசன் வாழ்த்து

(ஹுஸ்பர்)

கிழக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக நியமனம் பெற்றுள்ள இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமானுக்கு மக்கள் நீதி மையம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் தனது வாழ்த்தைத் தெரிவித்துள்ளார்.



தனது சேவைக் காலத்தில் மக்களின் தேவைகளை அறிந்து எண்ணற்ற சேவைகளை மக்களுக் குச் செய்ய வாழ்த்துத் தெரிவிப்பதாக கமல்ஹாசன் மேலும் தெரிவித்துள்ளார்.

அதற்குநன்றிதெரிவித்த கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், கமல்ஹாசனைக் கிழக்கு மாகாணத்திற்கு வருகை தருமாறு அழைப்பும் விடுத்துள்ளார். (05)



# கிழக்கில் சுரங்க மணல் அகழ்வு அதிகரிப்பதாகக் குற்றச்சாட்டு

## அரச அதிகாரிகளுக்கு ஆளுநர் விடுத்த உத்தரவு



(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களின் அரசாங்க அதிபர் மற்றும் பிர தேசசெயலாளர்களுடன் பொதுமக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடினார். குறித்த கலந்துரையாடல் திருகோணமலையில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் அதிகமாக சுரங்கம் மற்றும் மணல் அகழ்வு நடைபெற்று வருவதாகக் குற்றச்சாட்டுகள் கிடைக்கப்பெற்று வருவதால் தற்போது காணப்படும் பொறிமுறை குறித்து விளக்கம் அளிக்குமாறும், சட்டவிரோத சுரங்கம் மற்றும் மணல் அகழ்வுகள் தொடர்ந்தும் நிலவிவருவதால் அது தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளுமாறும் அரச அதிகாரிகளுக்கு செந்தில் தொண்டமான் பணிப்புரை விடுத்துள்ளார். (05)

# தேக்கம் காட்டுப்பகுதிக்கு விஷமிகளால் தீ வைப்பு



புதுக்குடியிருப்பு கேப்பாப்புலவு பகுதியில் அமைந்துள்ள தேக்கம் காட்டுப்பகுதி விமிகளால் தீவைக்கப்பட்டு எரிந்த வண்ணம் உள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு கேப்பாப்புலவு பகுதியில் அப்பகுதி இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் நேற்று (திங்கட்கிழமை) காலை 9:30 மணி அளவில் இனந்தெரியாத விஷமிகளால் தீவைக்கப்பட்டு எறிந்த நிலையில் இருப்பதைக் கண்டதாக வீதியால் வற்றாப்பளைகண்ணகி அம்மனுக்கு யாத்திரையாக செல்லும் பக்தர்கள் தெரிவித்துள்ளனர். சுமார் 200 மீட்டருக்கு அதிகமான பகுதிகள் எரிந்த வண்ணம் உள்ளன எனத் தெவிக்கப்படுள்ளது. (05-113)

காலைக்கதிர் Kalaikkathir

# இளவாலை தேவாலயத்தின்மீது இனந்தெரியாதோர் தாக்குதல்!



யாழ்ப்பாணம், ஜூன் 06

இளவாலை மாரீசன் கூடலில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்தின் மீது ஞாயிற்றுக்கிழமை இரவு இனந்தெரியாதவர்கள் மேற்கொண்ட தாக்குதலில் தேவாலயத்தில் சுருபம் வைக்கப்பட்டிருந்த கண்ணாடி உடைந்து சேதமாகியுள்ளது. அத்துடன் சுவர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தகவல் பெறுவதற்கு இளவாலை பொலிஸ் நிலையத்தின் தொலைபேசிக்கு ஊடகவியலாளர் ஒருவரால் தொடர்பு மேற்கொள்ளப்பட்டது.

குறித்த ஊடகவியலாளர் தன்னை உறுதிப்படுத்திய பின்னர் மேற்படி சம்பவம் குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதா என வினவினார். ஆனால் இளவாலை பொலிஸார் தகவல் வழங்க முடியாது என மறுத்துள்ளனர்.

பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி வெளியே சென்றுவிட்டார் என்று கூறினர். அதற்கு ஊடகவியலாளர் பொறுப்பதிகாரி வெளியே சென்றால் பதில் பொறுப்பதிகாரி ஒருவர் இருப்பார் தானே அவரிடம் அனுமதி பெற்றுவிட்டு தகவல் வழங்குங்கள் எனக் கூறினார்.

இருந்தபோதும் பொலிஸார் தகவல் வழங்க மறுத்தனர். பொலிஸ் திணைக்களத்தின் நிலையான தொலைபேசிக்கு அழைப்பு மேற்கொண்டிருந்த நிலையில், தகவலை பெறுவதற்கு பொறுப்பதிகாரிக்கு அழைப்பு மேற்கொள்ளுமாறு கூறினர். இதனால் குறித்த சம்பவத்துக்கும் இளவாலை பொலிஸாருக்கும் இடையே தொடர்பு உள்ளதா என சந்தேகம் எழுந்துள்ளது. (05)

# பெண்களின் முகத்தில் மிளகாய்த்தூளை விசிறி தங்கநகை கொள்ளையடிக்கும் கும்பல் கைது



பெண்களின் முகத்தில் மிளகாய்த் தூளை வீசி தங்க நகைகளைக் கொள்ளையடிக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட குழு ஒன்றின் உறுப்பினர்களில் ஐவர் வாகனங்கள் மற்றும் பல பொருள்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் எனக் களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் களுத்துறை, பன்விலாஹேனவத்த பிரதேசத்தில் வசிக்கும் 30 வயதுக்கு உட்பட்டவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு ஓட்டோக்கள் மற்றும் திருடப்பட்ட மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் சந்தேக நபர்கள் ஐவரும் வீதியில் செல்லும் பெண்களின் முகத் தில் மிளகாய்த்தூளை விசிறி அவர்களைத் தாக்கி தங்க நகைகளை கொள்ளையடித்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதான சந்தேக நபரிடமிருந்து திருடப்பட்ட தங்கநகைகள், ஜெனரேட்டர், கார் கழுவும் இயந்திரம், இரண்டு கையடக்கத் தொலைபேசிகள், இரண்டு ஓட்டோக்கள் மற்றும் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் என்பன கைப்பற்றப்பட்டன என பொலிஸார் தெரிவித்தனர். (05)



# திருமலையில் மக்கள் சந்திப்பு செந்தில் தலைமையில் ஏற்பாடு!

(ஹூஸ்பர்)

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் வழிகாட்டுதலின் கீழ் நாளை (புதன்கிழமை) திருகோணமலை மாவட்ட செயலக புதிய கேட்போர் கூடத்தில் மக்கள் சந்திப்பு நடைபெறவுள்ளது.


இந்த மக்கள் சந்திப்பு மதியம் 2 மணிக்கு ஆளுநரின் தலைமையில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படும்.

மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இதன் போது முன்வைக்க முடியும்.

இந்நிகழ்வில் மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து நிறுவனங்களின் பிரதானிகளும் கலந்து கொள்வர். (05)

# எட்டரைக் கோடி ரூபா பெறுமதியான தங்கத்தை கறுப்புப்பூச்சு பூசி நாட்டுக்குள் கடத்த முயற்சி

## பிரான்ஸ் பிரஜை கைது



இலங்கை சுங்கத்தின் இரத்தினக்கல் மற்றும் ஆபரண மதிப்பீட்டுப் பிரிவு மற்றும் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகள் குழுவினர் சுமார் எட்டரைக் கோடி ரூபா பெறுமதியான 4 கிலோ 611 கிராம் தங்கத்தை கட்டுநாயக்க விமான நிலை யத்தில் கைப்பற்றியுள்ளனர்.

இந்நிலையில், சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் தங்கத்தைக் கொண்டு வர முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டில் பிரான்ஸ் பிரஜை ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

35 வயதுடைய இந்த பிரான்ஸ் நாட்டவர், இதற்கு முன்னரும் பல தடவைகள் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த நிலையில், இம்முறை 24 மணித்தியாலங்களுக்கு மாத்திரம் இலங்கைக்கு வருவதைக் கருத்தில் கொண்டு அவரது பயணப்பொதிகளை பரிசோதித்தபோது சுங்க அதிகாரிகளால் தங்கத்தைக் கண்டுபிடிக்க முடிந்துள்ளதாக சுங்கத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சந்தேக நபர் 3 ஆம் திகதி காலை 6.45 மணியளவில் பாரிஸிலிருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

இதன்போது மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போதே அவரது பொதியிலிருந்து தங்கம் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் முதல் சோதனையில் அதனைக் கண்டுபிடிக்க முடியாத வகையில் அவற்றின் மீது கறுப்புப் பூச்சு பூசப்பட்டிருந்ததாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

சந்தேக நபரான பிரான்ஸ் நாட்டவர் தண்டப்பணத்தை செலுத்த தவறிய நிலையில், சுங்க அதிகாரிகளால் நீர்கொழும்பு பதில் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவரை 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (05)

# கோழி இறைச்சி, மீன் விலை அதிகரிப்பு தற்காலிகமானதே

## வர்த்தக அமைச்சு அறிவிப்பு

அண்மைக்காலமாக கோழி இறைச்சி மற்றும் மீனின் விலைகள் அதிகரித்துள்ளமை தற்காலிகமானதே என என வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த சில நாள்களாக கோழி இறைச்சி, மீன் மற்றும் காய்கறிகளின் விலை கணிசமாக உயர்ந்துள்ளது.

இந்நிலையில் ஓரிரு வாரங்களுக்கு இதே விலை தொடரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், விலைகளை தன்னிச்சையாக அதிகரிக்க முடியாது எனவும், தவறிழைக்கும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நுகர்வோர் விவகார அதிகார சபை அறிவித்துள்ளது.

இதற்கிடையில், அடுத்த இரண்டு வாரங்களில் கோழி இறைச்சியின் விலை குறையும் என எதிர்பார்ப்பதாக கோழிப்பண்ணையாளர்கள் சங்கங்கள் தெரிவித்துள்ளன. (05)

# பேக்கரி உற்பத்தி பொருள்களின் விலைகளில் மாற்றம் இல்லையாம்

## உற்பத்தியாளர் சங்கம் திட்டவட்டம்

சமையல் எரிவாயுவின் விலை குறைக்கப்பட்டாலும் பேக்கரி உற்பத்திகளின் விலையில் மாற்றம் ஏற்படுத்த முடியாது என அகில இலங்கை பேக்கரி உற்பத்தி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் 25 சதவீதமானோரே சமையல் எரிவாயு மூலம் பேக்கரி உற்பத்திகளை மேற்கொள்கின்றனர். இதன் காரணமாக, பேக்கரி உணவு உற்பத்திப் பொருள்களின் விலைகளைக் குறைக்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சமையல் எரிவாயு விலைத்திருத்தம் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்களில் விலைத்திருத்தங்களை தமது சங்கம் மேற்கொள்விலை எனவும் குறிப்பிட்டுள்ளார். (05)

# பத்தரமுல்லை கூட்டுறவு காப்புறுதிக் கூட்டுத்தாபன புதிய தலைவராகப் பதவியேற்கச் சென்றவர் மீது சூடு

பத்தரமுல்லை கூட்டுறவு காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராகப் பதவியேற்கச் சென்ற தர்ன் சமரவிக்ரம என்பவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

பாதுக்க கெமுனு மாவத்தையில் இன்று (திங்கட்கிழமை) காலை 7.35 மணியளவில் இந்தச் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த 62 வயதுடைய நபர் ஹோமாகம போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என மீகொட பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர் தனது வீட்டிலிருந்து வல்பிட்ட கெமுனு மாவத்தை நோக்கி காரில் சென்றுகொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கைத்துப்பாக்கியால் நான்கு முறை துப்பாக்கிச் சூடு நடத்தினர் என ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வைத்தியசாலைக்குக் கொண்டுச் செல்லப்பட்ட நபரின் கையில் காயம் ஏற்பட்டுள்ளதாகவும், அவரது நிலைமை கவலைக்கிடமாக இல்லை எனவும் ஹோமாகம ஆதார வைத்தியசாலையின் பேச்சாளர் தெரிவித்தார். (05)

# சிறுநீர் பாதையிலிருந்து இரத்தம் கசியும்வரை மாணவன் மீது தாக்கு

## பாணந்துறை சம்பவத்தில் 5 மாணவர்கள் கைது

கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைக்கு இம்முறை தோற்றிய மாணவனை சிறுநீர் பாதையிலிருந்து இரத்தம் கசியும் வரை வயிற்றின் கீழ்ப் பகுதியில் தாக்கிய சம்பவம் தொடர்பில் பாடசாலை மாணவர்கள் ஐவர் கைது செய்யபட்டுள்ளனர் எனப் பாணந்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலுக்கு உள்ளான மாணவன் கல்வி கற்கும் அதே பாணந்துறை பாடசாலையின் கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைக்கு தோற்றிய 5 மாணவர்களே இந்தச் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலுக்கு உள்ளான மாணவன் பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும், அங்கும் அவரது உடலின் சிறுநீர் பாதையில் இருந்து இரத்தம் வெளியேறியதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவம் குறித்த முறைப்பாடு தொடர்பில் மேலும் விசாரணை நடத்த வேண்டிய அவசியமில்லை என்ற முறைப்பாட்டாளரின் கோரிக்கையின் காரணமாக கைதுசெய்யப்பட்ட ஐந்து மாணவர்களும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (05)

# சாய்ந்தமருது பிரதேச சமுர்த்தி அமைப்பு முன்மாதிரி கௌரவிப்பு



(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பை மாவட்டத்தின் சிறந்த முன்மாதிரி அமைப்பாக பாராட்டு பெறுமளவுக்கு வழிநடத்தும் அபிவிருத்திஉத்தியோகத்தர் ஏ.எப்.றிகாஸா ஷர்பீனை கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் மாதாந்த கூட்டம் அமைப்பின் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.ஐ. சம்சுதீன் தலைமையில் சமுர்த்தி வங்கிச் சங்க கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வைத்தே அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எப். றிகாஸா ஷர்பீன் பொன்னாடை போர்த்தி, நினைவுப் பரிசு வழங்கி நிர்வாகிகளால் கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது சமுர்த்தி வங்கிச் சங்க முகாமைத்துவப் பணிப்பாளர் ஊடகவியலாளர் றியாத் ஏ.மஜீத், சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜஃபர், சாய்ந்தமருது பிரதேச சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் பொருளாளர் ஏ.எம்.பசீல், முன்னாள் தலைவர் கலைஞர் ஏ.அலாவுதீன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சாய்ந்தமருது பிரதேச சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பினூடாக மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்களுக்கு உள்நாட்டு, வெளிநாட்டு தனவந்தர்களின் உதவிகளைப் பெற்றுதிட்டங்களை செயற்படுத்துவதிலும் மாவட்டத்தில் முன்மாதிரியான கருத்திட்டங்களை செயற்படுத்தி மாவட்டத்தில் சிறந்த அமைப்பாக மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ்.எம். சப்றாஸினால் நற்பெயர் வாங்ககாரணகர்த்தாவாகசெயற்படும் அபிவிருத்தி உத்தியோகத்தர் றிகாஸா ஷர்பீனின் ஆளுமையை பாராட்டியே சாய்ந்தமருதுபிரதேசசமுர்த்திசமுதாய அடிப்படை அமைப்பினரால் இந்தக் கௌரவம் அவருக்கு வழங்கப்பட்டது.

சாய்ந்தமருது பிரதேச செயலக பிரதேச சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பினை மாவட்டத்தில் முன் மாதிரி அமைப்பாக வழிநடாத்தும் அபிவிருத்தி உத்தியோகத்தர் றிகாஸா ஷர்பீனின் ஆளுமையை அண்மையில் சாய்ந்தமருதில் இடம்பெற்ற இப்தார் நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீஸன், மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ்.எம். சப்றாஸ், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக் ஆகியோர் பாராட்டிப் பேசியமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது அபிவிருத்தி உத்தியோகத்தர் றிகாஸா ர்பீன் கருத்துத் தெரிவிக்கையில், இப்பாராட்டுக்கும் கௌரவத்திற்கும் நான் மட்டும் உரித் துடையவள் அல்லர். மாறாக இப்பாராட்டினையும் கௌரவத்தினை யும் பெறுவதற்கு எனக்கு பெரிதும் ஒத்துழைப்பு வழங்கி வரும் வெளிக்கள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை இவ்விடத்தில் நினைவுகூர்ந்து அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அமைப்பினூடாக மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களுக்கு எனக்கு ஆலோசனை வழங்கி வழிகாட்டும் பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக், தலைமைப்பீட முகாமையாளர் ஏ.சீ.ஏ. நஜீம், முன்னாள் சமுர்த்தி வங்கிச் சங்க முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ.எல்.யூ.ஜுனைதா ஆகியோருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அமைப்பினூடாக மேற்கொள்ளப் வேலைத்திட்டங்களை ஒழுங்குபடுத்தி நெறிப்படுத்தித்தரும் தற்போதைய சமுர்த்தி வங்கிச்சங்க முகாமைத்துவப் பணிப்பாளர் றியாத் ஏ.மஜீத், கணனி உதவியாளர் எஸ்.சாபித் அக்மல் உள்ளிட்ட சக உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதற்கு மேலாக பிரதேச செயலக பிரதேச சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு சிறந்த முறை யில் திட்டங்களை அமுல்படுத்த ஒத்துழைப்பு வழங்கும் அமைப்பின் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.ஐ.சம்சுதீன், செயலாளர் ஏ.முபீதா, பொருளாளர் ஏ.எம்.பசீல், முன்னாள் தலைவர் ஏ.அலாவுதீன் ஆகியோருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் எமது பிரதேச செயலக பிரதேச சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் செயற்திட்டங்களைப் பாராட்டி, எமது செயற்பாட்டுக்கு ஊக்கமளித்து வரும் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீஸன், மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ்.எம். சப்றாஸ் ஆகியோருக்கும் இதன்போது தனது நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டார். (05)

## வைத்தியசாலையில் சிகிச்சைபெறும்

# திலினியை மருத்துவ அறிக்கையுடன் நீதிமன்றில் முன்னிலையாக உத்தரவு

வாகனம் ஒன்றை வழங்குவதாக உறுதியளித்து மாத்தறை பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவரிடமிருந்து 80 லட்சம் ரூபாவை பெற்று மோசடி செய்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள திலினி பிரியமாலிக்கு எதிரான வழக்கை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி வரை ஒத்திவைக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்ட பெந்தி முன்னிலையில் இன்று (திங்கட்கிழமை) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது குற்றம்சாட்டப்பட்டுள்ள திலினி பிரியமாலி நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.

அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சுகவீனம் காரணமாக திலினி பிரியமாலி கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் எனத் தெரிவித்தார்.

இதனையடுத்து , வழக்கை ஓகஸ்ட் 11ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உத்தரவிட்ட நீதிபதி, அன்றைய தினம் ஏற்றுக் கொள்ளப்பட்ட மருத்துவ அறிக்கையுடன் குற்றம் சாட்டப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்று உத்தரவிட்டார்.(05)


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
conditions apply*
இந்தியாவில் அதி வேகமாக விற்பனையாகும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.06.2023இல் வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 04

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 22 திங்கட்கிழமை 05.06.2023 கதிர் 77

# சமலை ஜனாதிபதியாக்கியிருந்தால் நாட்டுக்கு இந்த நிலை வந்திருக்காது

## பெங்கமுவே நாலக தேரர் தெரிவிப்பு

எனது முன்மொழிவுக்கு அமைவாக, ரஜபக்ஷ குடும்பத்தின் மூத்தவரான சமல் ராஜபக் ஷவை ஜனாதிபதியாக்கியிருந்தால் தற்போதையநிலைமைவந்திருக்காது என்று பெங்கமுவே நாலக தேரர் தெரிவித்துள்ளார். சிங்களவார இதழ்ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ராஜபக்ஷக்கள்நூறுவீதம் சரியானவர்கள் என்று நாங்கள் கூறவில்லை. ஆனால். நாட்டில்நடக்கும்அனைத்துப் பிரச்சினைகளையும் வெளிக் கொண்டுவந்து அதில் ராஜபக்ஷக்களைஇணைத்து அவர்களின் எதிர்காலத்தினை அழிக்கும் முயற்சியே தற்போதுநடைபெறுகின்றது. இருப்பினும் சமூகத்தில்ராஜபக்ஷக்கள் முன்னேறுவதற்குப் பல வழிகள் உள்ளன.

ஈஸ்டர் தாக்குதலும் ராஜபக்ஷக்களின் செயல் என்று சிலர் கூற 2 முயற்சிப்பதைப் பார்த்தோம்.

# போதகர் ஜெரோமின் மனு மீது ஜூலை 28 விசாரணை நடக்கும்

தன்னை கைது செய்ய தடை உத்தரவு பிறப்பிக்கக் கோரி போதகர் ஜெரோம் பெர்னாண்டோ தாக்கல் செய்த மனு மீதான விசாரணையை எதிர்வரும் ஜூலை 28ஆம் திகதிக்குஒத்திவைப்பதாகஉயர்நீதிமன்றம்அறிவித்துள்ளது.

எஸ்.துரைராஜா, குமுதுனி விக்ரமசிங்க மற்றும் ஷிரான் குணரத்ன ஆகிய மூவர் கொண்ட உயர்நீதிமன்ற நீதியரசர்கள் அடங்கிய அமர்வு முன்னிலையில் மனு இன்றையதினம் குறித்த மனு மீதான விசாரணை நடைபெற்றது.

இதன்போது. இடையீட்டு மனுவை சமர்ப்பித்த எல்லே குணவங்ச தேரர் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்தன தமது தரப்பினரால் சமர்ப்பிக்கப்பட்ட மனுவுக்கான காரணங்களை சமர்ப்பனம் செய்வதற்கு அவகாசத்தினைக் 2

# எதிர்க்கட்சியில் புதிய கூட்டணி?

எதிரணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சில கட்சிகள் மற்றும் நபர்கள் இணைந்து புதியதொரு அரசியல்கூட்டணியை உருவாக்குவதற்குத் தீர்மானித்துள்ளனர்.

சம்பிக்க ரணவக்க, குமார வெல்கம, ராஜித சேனாரத்னமற்றும்ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனகட்சியின் சுயாதீன அணியொன்று இணைந்தே புதிய கூட்டணிக்கான பேச்சுக்களை ஆரம்பித்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்க்கட்சியில் இருந்து சுயாதீனமாகச்செயற்படுவது குறித்தும் எதிர்காலத்தில் தேர்தலில் இணைந்து போட்டியிடுவது குறித்தும் இவர்கள் கலந்துரையாடியுள்ளனர் எனவும் தெரியவருகின்றது. (02)

### கல்வியியல் கல்லூரிகளில் இருந்து வெளியேறும் கிழக்கு

# ஆசிரியர்களுக்கு கிழக்கிலேயே நியமனம் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த உறுதி

நூருல் ஹுதா உமர்



கிழக்கு மாகாணத்திற்கு வெளியே நியமனம் செய்யப்பட்ட கிழக்கு மாகாண கல்வியற் கல்லூரி ஆசிரியர்களை கிழக்கு மாகாணத்தில் நியமிக்க நடவடிக்கை எடுப்பதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவிடம் இன்றைய சந்திப்பின் போது உறுதியளித்துள்ளார் என்று தெரிவிக்கப் பட்டது.

கிழக்கு மாகாண கல்வியற் கல்லூரி ஆசிரியர், ஆசிரியைகளுக்கான நியமனம் கிழக்கு மாகாணத்திற்கு வெளியே வழங்கப்படவுள்ளதாக கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து அந்த ஆசிரியர் நியமனத்தில் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் சுற்றாடல் அமைச்சர் எந்திரி இஸட்.ஏ.நஸீர் அஹமட், முன்னாள் இராஜாங்க அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், முன்னாள்இராஜாங்கஅமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப், நாடாளுமன்ற உறுப்பினர் இசாக் ரஹ்மான் ஆகியோர் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த இன்று கல்வியமைச்சில் சந்தித்துக் கலந்துரையாடினர். அப்போது அமைச்சர் இந்த உறுதிமொழியை வழங்கினார் என்று நாடாளுமன்றஉறுப்பினர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

கிழக்கு மாகாண கல்வியற் கல்லூரி ஆசிரியர், ஆசிரியைகளை

# பெரமுனவுக்கு அமைச்சப் பதவிகள் வேண்டும் என்பதில் கட்சி பிடிவாதம்

## ஜனாதிபதியிடம் வலியுறுத்துவோம் என்கிறார் சனத் நிஷாந்த

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், மாவட்ட ரீதியில் முதலிடங்களைப் பெற்றவர்களுக்கும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப்பதவிகளையும், இராஜாங்க அமைச்சுப்பதவிகளையும் வழங்க வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைக் கோரவுள்ளதாக நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்துள்ளார்.

பொதுஜனபெரமுனவின் சில மூத்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சுப்பதவிகளை வழங்குமாறு கோரி அவர்களில் பத்துப் பேர் அடங்கிய பட்டியலை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள நிலையில் அது குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதுவரையில் நடவடிக்கைகளை முன்னெடுக்காமை தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:

எமது கட்சியின் மூத்த உறுப்பினர்களுக்குஅமைச்சுப் பதவிகள் வழங்கப்படாதது குறித்துஅவர்கள்அதிருப்தியில் உள்ளார்கள். இந்த விடயம் குறித்து கட்சியின் செயலாளர் சாகர காரியவசத்துடன் பேச்சு நடத்தவுள்ளோம்.

மஹிந்தராஜபக்ஷவுடன் நாங்கள் இது பற்றி கலந்துரையாடினோம். மூத்த உறுப்பினர்களுக்கு அமைச்சு பதவிகள் வழங்கப்பட வேண்டும் என்பதே அவரது நிலைப்பாடாகவுமுள்ளது.

இதுதொடர்பானபேச்சை நாங்கள் அடுத்த வாரம் மீண்டும் ஆரம்பிக்கவுள்ளோம். அதுமட்டுமன்றி பொதுத்தேர்தலில் மாவட்டங்களில் முதலிடத்தைபெற்றவர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குவது தொடர்பாகவும் நாம் கோரிக்கைகளைமுன்வைக்கவுள்ளோம். ஏற்கனவே அமைச்சுப் பதவியை வழங்குவதற்கான கோரிக்கை ஜனாதிபதியிடம் விடுக்கப்பட்டுள்ளது. கட்சிக்கு அமைச்சுப் பதவிகளைப் பெறுவதே எமது எதிர்பார்ப்பாகும். இதனைநாங்கள் ஜனாதிபதியின்கவனத்திற்குக் கொண்டு செல்வதற்கும் தீர்மானித்துள்ளோம்.

சமமாக அமைச்சு பதவிகள்பகிரப்படும்வகையிலேயே இறுதிப் பேச்சை நடத்தவுள்ளோம். அதன்போது எமது கோரிக்கைகளை ஜனாதிபதியிடம் தெரிவிப்போம் - என்றார்.

# பயங்கரவாதத்திற்கான நிதி உதவியை தடுக்கும் செயற்பாடுகள் மிகவிரைவில்

## ஜனாதிபதி அறிவிப்பு

சட்டவிரோத பணப் பரிமாற்றம் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியுதவி வழங்குவதை தடுப்பதற்கான அடுத்தகட்ட செயற்பாடுகளை இலங்கை விரைவில் ஆரம்பிக்கும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

இந்தச் செயற்பாடுகள் நாட்டின் வணிகச் செயற்பாடுகளை இலகுபடுத்துவது தொடர்பான மதிப்பீடுகள் மற்றும்வெளிநாட்டுமுதலீடுகளை ஈர்த்தல் போன்ற விடயங்கள் மீது நேரடியாகஞ; தாக்கம் செலுத்தும்என்றும்ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நுவரெலியா கிரேண்ட ஹோட்டலில் நடைபெற்ற சட்டத்தரணி கள் மாநாட்டின் 2ஆம் நாள் நிகழ்வில் 'பொருளாதாரத்தை வழமைக்குதிருப்பும்முயற்சிகளில் நீதிக்கட்டமைப்பின்பணியும் வணிக நிலைத்தன்மையும்' என்ற தொனிப்பொருளின் கீழ் இடம்பெற்று வரும் இம்மாநாட்டில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் கருத்துவெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சட்டவிரோத பணப் பரிமாற்றம் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியுதவிகளை வழங்குவதைத் தடுப்பதற்காகக் காணப்படும் சட்ட திட்டங்களின் இடைவெளிகளை விரைவில் கண்டறிய வேண்டியது அவசியமாகும். அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில் இலங்கை மூலோபாய குறைபாடுகள் கொண்ட நாடாகப் பட்டியலிடப்படலாம். அதனால் நாட்டின் அபிவிருத்திக்கு பாதகமான விளைவுகள் ஏற்படலாம்.

தேசிய 2

# ஆயிரம் வேல் தாங்கிய பக்தர்களுடன் மாபெரும் கதிர்காம வேல்யாத்திரை

## சித்தர்கள் குரல் சங்கர் ஜி ஏற்பாடு

1,000 வேல்களுடன், 1000 முருக பக்தர்கள் கதிர்காமம் நோக்கி பயணிக்கும் மாபெரும் வேல் யாத்திரை சித்தர்கள் குரல் அமைப்பினரால் இவ்வருடத்தில் முதன் முறையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



ஜூன்14 உகந்தை மலை முருகன் ஆலயத்தில் இருந்து இவ் ஆறு நாட்கள் வேல் யாத்திரை ஆரம்பமாகின்றது.

திருமூலர் பெருமானின் அருளாசியுடன், சித்தர்களின் குரல் சிவசங்கர் குருஜியின் நேரடி வழிகாட்டலின் கீழ் இவ்வருடத்தில் இருந்து 1,000 வேல்களுடன், 1000 முருக பக்தர்கள் பயணிக்கும் மாபெரும் வேல் யாத்திரையாக, கதிர்காமம் நோக்கி கந்தனை தரிசிக்க வேலோடு மலையில் இருந்து 'பாத யாத்திரை' தொடங்குகிறது.

இந்த மாபெரும் வேல் யாத்திரையை வேலோடு மலை முருகன் ஆலயத்தின் ஆதீனகர்த்தா முருகஸ்ரீ தியாகராஜா ஆசிரியர் வேல்சாமியாக இருந்து இவ்வருடம் முதல் யாத்திரையை தலைமையேற்று நடத்துகிறார்.



அதற்குரிய சம்பிரதாய வழிபாடுகள் அனைத்தும் சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி தலைமையில் கடந்த சனிக்கிழமை பௌர்ணமி தினம் வேலோடுமலை முருகன் ஆலயத்தில் நடைபெற்றது.

சித்தர்களின் குரல் யாத்திரையின் வேல் சாமியாக முருக பெருமான் சந்நிதியின் வேலை வேல்சாமி தியாகராஜா பெற்றுக்கொண்டார் ஜூன் 12 காலை 10 மணிக்கு வேலோடுமலை 2

# முட்டை உற்பத்தி வடக்கில் மந்தம்

வடமாகாணத்தில்முட்டை உற்பத்தி மந்த நிலையை அடைந்திருப்பதாகக் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள மாகாண பணிப்பாளர் மருத்துவர் வசீகரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தலைமையில் நடைபெற்ற விவசாயத்துறைஅமைச்சின் செயற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடலில் கலந்துக் கொண்டு கருத்து தெரிவித்த தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



வடமாகாணத்தில் முட்டைக்கான தேவை அதிகமாக காணப்படும்போதும் அவற்றை உற்பத்தி செய்வதற்கான பண்ணையாளர் எண்ணிக்கை மிகக் குறைவு என்பதால் வடமாகாணத்துக்குத் தேவையான முட்டைகளை வெளிமாகாணங்களில் இருந்தே இறக்குமதிசெய்யவேண்டிய நிலை காணப்படுகின்றது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

குறைந்த விலையில் உடலுக்குத் தேவையான நிறைவான புரோட்டீன் முட்டையில் இருந்தே கிடைக்கின்றது. ஆனால் முட்டைகளை வடக்கில் அதிகளவில் உற்பத்திசெய்ய முடியாத நிலையே காணப்படுகின்றது. எமது திணைக்களத்தினால் இரண்டு இடங்களில் வாரத்திற்கு 15,000 கோழிக் குஞ்சுகள் உற்பத்தி 2

# முன்னணி உறுப்பினர்கள் இருவர் இன்று காலை கைது

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வடமராட்சி கிழக்கு மகளிர் அணித்தலைவர் சற்குணதேவி ஜெகதீஸ்வரன் (அருள்மதி) கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். இன்று காலை அவரை யாழ்ப்பாணம், மருதங்கேணியில் உள்ள அவரது வீட்டில் வைத்துக் கைது செய்தபொலிஸார்கிளிநொச்சி நீதிமன்றத்தில்முற்படுத்தினர்.

ஜூன் 3 மருதங்கேணியில் முன்னணியினரின் அரசியல் கூட்டம்ஒன்றில்அதன்தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கலந்து கொண்டிருந்த நிலையில், அங்குவந்தபொலிஸாருக்கும் அவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டின்போது நாடாளுமன்ற உறுப்பினர் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்துடன் தொடர்பு படுத்தியே சற்குணதேவி

# வேலூர் பல்கலையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

## யாழ். பல்லைக்கழகம் இன்று கைச்சாத்து

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக பொறியியல் பீடத்துக்கும், இந்தியாவின், தமிழ்நாடு மாநிலம், வேலூர் தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்துக்கும் இடையிலான கல்வி சார் கூட்டுக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை இன்று கைச்சாத்திடப்பட்டது.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத்தூதுவர் ஷ்ரீராகேஷ் நட்ராஜ், யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகளும் பங்கேற்றனர்.

வேலூர் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் சார்பில், கணினிவிஞ்ஞானம் மற்றும் பொறியியல் பாடசாலையின் (School of computer science and Engineering - SCOPE) பீடாதிபதி கலாநிதி கே.ரமேஸ்பாபு, பேராசிரியர் பி. சுவர்ணலதா மற்றும் சர்வதேச உறவுகளுக்கான உதவிப் பணிப்பாளர் கலாநிதி ஜே.என்.வி. ரகுராம் ஆகியோர் நிகழ்நிலை வாயிலாக இந்த நிகழ்வில் 2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## சமலை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுபோன்ற செயற்பாடுகள் கோழைத்தனமானவை. ராஜபக்ஷக்களை வெள்ளையடிக்க நாங்கள் தயாராக இல்லை. அவர்கள் தவறு செய்தால் அதனை தவறு என்று தெரிவிக்கும் சக்தி எமக்குள்ளது. ஆனால் இந்த நாட்டில்நடக்கும் அனைத்துத் தவறுகளுக்கும் ராஜபக்ஷக்கள்தான் காரணம் என்று கூறி அவர்கள் மீது பழி போடவேண்டும் என்பதில் எங்களுக்கு உடன்பாடு இல்லை.

கோட்டாபய ராஜபக் ஷ மீது நாம் கொண்டிருந்த நம்பிக்கையை அவர் முற்றாக அழித்தார். இந்த நாட்டின் பெரும்பான்மை மக்கள் அவர் மீது வைத்த நம்பிக்கையைச் சிதைத்ததற்கு அவரே பொறுப்பேற்கவேண்டும். அதற்காக அவர் தண்டிக்கப்படவேண்டும்.

தற்போதும் சிலர்கோட்டாபயவுக்கு ஆதரவளித்தமைக்காக எம்மைக் குற்றஞ்சாட்டுகிறார்கள். உண்மையொன்றைக் கூற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால் இதுவரை வெளிவராத விடயத்தை கூறவேண்டியுள்ளது.

அன்றைய தினம் ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்புமனுக்கள்வழங்கப்பட்ட போது, சமல் ராஜபக் ஷவை வேட்பாளராக முன்னிறுத்துமாறுநான்பரிந்துரைத்தேன். எனினும் அந்தக் கோரிக்கை முழுமையாகஏற்றுக்கொள்ளப் படவில்லை.

அதேநேரம் பாதுகாப்புச் செயலாளராக கோட்டாபய நாட்டுக்குஆற்றியசேவையை முன்னிலைப்படுத்தி அவரை ஜனாதிபதியாக்குவதற்கு முன்மொழிந்தார்கள். அதற்காக நாமும் கடுமையாக உழைத்தோம். அப்போதே சமல் ஜனாதிபதி வேட்பாளராக முன்மொழியப்பட்டிருந்தால், நாடு இந்த நிலையை அடைந்திருக்காதென நான் இன்னும் நம்புகிறேன்து - என்றார்.

## போதகர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரினார்.

அதற்கு மனுதாரரான ஜெரோம் பெர்னாண்டோ சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி ரியன்சி அர்சகுலரத்ன ஆட்சேபனையை வெளியிட்டார்.

எவ்வாறாயினும், முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த நீதியரசர்கள் குழாம், மனு தொடர்பான காரணங்களை முன்வைக்க எல்லே குணவன்ச தேரர் உள்ளிட்ட குழுவினருக்கு அனுமதி வழங்குவதற்குத் தீர்மானித்ததையடுத்து வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

முன்னதாக, கிரிஸ்தவ மத போதகர் ஜெரோம் பெர்னாண்டோ சமர்ப்பித்த அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணை செய்யாமல்தள்ளுபடிசெய்யுமாறு கோரி உயர் நீதிமன்றத்தில்எல்லேகுணவம்சதேரர் உள்ளிட்டோரால் இடையீட்டு மனு சமர்ப்பித்தனர்.

## பயங்கர .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கையொன்றின் கீழ் நாட்டை வழிநடத்திச் செல்ல வேண்டியது அவசியமாகும். தேசிய கொள்கையை வகுப்பதற்கான குழுவை நியமிக்கும்பணிகள்தற்போதும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தேசியக் கொள்கை வகுப்புச் செயற்பாடுகளின் போது அனைத்துத் தரப்பினரதும் இணக்கப்பாடுகளை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தாலும், மேற்படி விடயங்கள் குறித்து உடன்பாடு ஒன்றைஉருவாக்கிஅவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான முனைப்பை மேற்கொள்வதே இந்த ஆட்சியின் எதிர்பார்ப்பாகும்.

முன்னயை ஆட்சிகள் தேசிய கொள்கை ஒன்றை வகுக்கத் தவறியதன் காரணமாகவே இன்றளவில் நாட்டின் பிரச்சினைகள் உக்கிரமடைந்துள்ளன - என்றார்.

## முன்னணி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதுசெய்யப்பட்டிருக்கின்றார்.

பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. வவுனியா நீதிமன்றத்தில் அவருக்குப் பிணை வழங்கக்கூடாது என்று பொலிஸார் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்து அவரை ஜூன் 7 வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

முன்னணியின் மற்றொரு உறுப்பினரான உதயசிவம் என்பவரும் கைதுசெய்யப்பட்டிருக்கிறார். சற்குணதேவி கைதுசெய்யப்பட்டுச் சில மணி நேரத்தில் இவர் கைது செய்யப்பட்டார் என்றுமுன்னணியின்ஊடகப் பேச்சாளர்சுகாஷ்தெரிவித்தார்.

மருதங்கேணி சம்பவத்தில் கட்சித் தலைவர் கஜேந்திரகுமார் அச்சுறுத்தப்பட்டதை முதலில் வெளிப்படுத்தியவர் இவரே என்றும் அவர் தெரிவித்தார்.

வற்றாப்பளையில் வைத்து உதயகுமார் கைது செய்யப்பட்டார் என்று உதயசிவம் தெரிவித்தார்.

## வேலூர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்து கொண்டனர். யாழ். பல்கலைக்கழம் சார்பில் மற்றும் பல்கலைக்கழகப் பதிவாளர் வி. காண்டீபன், பொறியியல் பீடாதிபதி ஏந்திரி கே.பிரபாகரன், முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் ஏ.அற்புதராஜா, குடிசார் பொறியியல்துறைத்தலைவர் கலாநிதி பி.கேதீசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வேலூர்தொழில் நுட்பப் பல்கலைக்கழகம்

அதன் சர்வதேச உறவுகளுக்கான அலகின் ஊடாக சர்வதேச ரீதியாக நூற்றுக்கும் மேற்பட்ட பல்கலைக் கழகங்களுடன் இத்தகைய கூட்டு ஆய்வு மற்றும் கல்வி நடவடிக்கைகளுக்கான ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளது. இலங்கையில் ருகுண பல்கலைக் கழகம் வெல்லூர் தொழில் நுட்ப நிறுவனத்துடன் கூட்டு ஆய்வு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. இன்று கைச்சாத்திடப்பட்டுள்ள இந்தஉடன்படிக்கைக்கமைய இரண்டு தரப்புகளில் இருந்தும் மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் பரிமாற்றம், கல்வி, ஆய்வு நடவடிக்கைகளில் கூட்டு போன்ற விடயங்களில் கவனஞ் செலுத்தப்படவுள்ளன.

## முட்டை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டபோதும் அதனை தூகர்வதற்கான கேள்வி பண்ணையாளர் மத்தியில் குறைவாகவே காணப்படுகின்றது.

தீவனத்திற்கான முக்கிய உள்ளீடானசோளத்தின்விலை அதிகரிப்புக் காரணமாக கோழித்தீவனுக்குத்தட்டுபாடு ஏற்பட்டுள்ளதுடன் விலையும் பெருமளவில் அதிகரித்துள்ளது. இதனால் கோழி வளப்போரின் எண்ணிக்கை குறைந்துவிட்டது.

முட்டைகளை இறக்குமதி செய்வதைக் குறைத்து தீவனங்களை இறக்குமதி செய்வதன்மூலமாக உள்ளூர் கோழி பன்னையாளர்களை அதிகரிக்க முடியும். வடமாகாணத்தில் இறைச்சி உற்பத்தி தேவைக்கு மேலதிகமாக காணப்படுகின்றபோதும் இறைச்சியின் விலை அதிகரித்திருப்பதால் அனைத்துத் தரப்பினராலும் அதனை நுகரமுடியாத நிலை காணப்படுகின்றது.

எனவே வடமாகாணத்தில் தீவனங்களுக்குத் தேவையான உள்ளீடுகளை இறக்குமதி செய்து தீவன உற்பத்தியை அதிகப்படுத்துவதன் மூலமாக மந்த நிலையை அடைந்திருக்கும் காணப்படும் முட்டை உற்பத்தியினை அதிகரிக்கரிக்கமுடியும் - என்றார்.

இந்தகலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்டச்செயலர், யாழ். மாவட்டச் செயலர், வவுனியா மாவட்டச்செயலர், முல்லைத்தீவு மேலதிக மாவட்டச்செயலர், கிளிநொச்சி மேலதிக மாவட்டச் செயலர், திட்டமிடல்பணிப்பாளர்,வடமாகான விவசாய அமைச்சின் செயலாளர், மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைவரின் இணைப்பாளர், மாகாண/மாவட்ட திணைக்களங்களின் தலைவர்கள், நிறுவன பிரதிநிதிகள்,பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஊடகவியலாளர்கள் என பலர் கலந்து கொண்டுள்ளனர். (113)

## ஆசிரியர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கிலேயே பணிக்கமர்த்த நியமனம் வழங்கவேண்டும் என்றும், கிழக்கு மாகாண ஆசிரியர்களுக்கு இடம் பெறவுள்ள அநீதி தொடர்பிலும், கிழக்கு மாகாண ஆசிரியர்வெற்றிடம் தொடர்பிலும், கல்வி மேம்பாட்டு வேலைத்திட்டங்கள் தொடர்பிலும்அழுத்தமாக கோரிக்கையை முன்வைத்த நாடாளுமன்றஉறுப்பினர்கள் குழுதுரிதகதியில்நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை முன்வைத்தனர்.

இவற்றெல்லாம் கேட்டறிந்த அமைச்சர் ஏற்கனவே நியமன கடிதங்கள் சகல மாகாணங்களுக்கும்அனுப்பி வைக்கப்பட்டுள்ளதால் மாகாண ஆளுநர்களிடம் கடிதங்களை மீளப்பெறல் தொடர்பில் கலந்துரையாடவுள்ளதாவும் நாளை மாலை முதற்கட்டமாக ஊவா மாகாண ஆளுநரை அழைத்துபேசஉள்ளதாகவும் கிழக்கு மாகாண கல்வி மேம்பாட்டுக்குத் தனது முழு ஆதரவை எப்போதும் வழங்கத் தயாராக உள்ளதாகவும், கிழக்கு மாகாணத்திற்கு வெளியே நியமனம் செய்யப்பட்ட கிழக்கு மாகாண கல்வியற் கல்லூரி ஆசிரியர்களை கிழக்கு மாகாணத்தில் நியமிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் உறுதிபட தெரிவித்தார் என இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தநாடாளுமன்றஉறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் செய்தியாளர்களுக்குத் தெரிவித்தார்.

## ஆயிரம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் அனைத்து பூஜை நிகழ்வுகளும் நடைபெற்று மறுநாள்பஸ்மூலம்உகந்தை மலைநோக்கிய பயணம் ஆரம்பமாகும்.



ஜூன் 14 பிற்பகல் 2 மணிக்குஉகந்தைமலையில் இருந்து பாத யாத்திரை ஆரம்பித்துஜூன்19நண்பகல் கதிர்காமத்தைசென்றடையும்.

அனைத்து நாட்களும் யாத்திரீகர்கள் அனைவருக்கும் மூன்று வேளை சாத்வீக உணவும், இரண்டு வேளை தேனீரும் இலவசமாக வழங்கப்பட இருக்கிறது.



அனைத்து ஏற்பாடுகளையும் சித்தர்களின் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன்,

துணைத்தலைவர் மனோகரன் ஆகியோரின் நேரடி ஏற்பாட்டின் கீழ் நடைபெறுகிறது.






# குற்றச்செயல்களில் ஈடுபடும் எம்.பிக்களை நீக்குவதற்குச் சட்டம் அவசியம் தேவை!

## வலியுறுத்துகிறார் லக்ஸ்மன் கிரியெல்ல

குற்றச்செயல்கள் போன்றவற்றில் ஈடுபடும் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பதவி நீக்குவதற்கான சட்டத்தை அரசாங்கம் உடனடியாக சமர்ப்பிக்கவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி வேண்டுகோள் விடுத்துள்ளது.

சட்டமொன்றை அறிமுகப்படுத்தவேண்டிய அவசியம் உள்ளது. ஆனால், நாங்கள் அரசாங்கத்தைப் பிரதிநித்துவம் செய்யவில்லை உரிய சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்தவேண்டியது அரசாங்கத்தின் கடமை என அவர் தெரிவித்துள்ளார்.



குற்றச்செயல்களில் ஈடுபட்ட தவறாக நடந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கடந்த காலங்களில் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ள போதிலும் தற்போதைய சட்டங்களில் இதற்கான ஏற்பாடுகள் இல்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

தற்போதைய சட்ட ஏற்பாடுகளின் படி கிரிமினல்குற்றச்சாட்டுகள்சுமத்தப்பட்டால்மாத்திரமே ஒருநாடாளுமன்ற உறுப்பினரை பதவியிலிருந்துநீக்கமுடியும் எனத் தெரிவித்துள்ள அவர் இது பாரதூரமான விடயம் என குறிப்பிட்டுள்ளார்.

தவறானசெயல்களில் ஈடுபடும் நாடாளுமன்ற உறுப்பினரை பதவிநீக்குவதற்கான சட்டமூலத்தை அறிமுகப்படுத்தும் நடவடிக்கையை ஐக்கிய மக்கள் சக்தி முன்னெடுக்குமா என்ற கேள்விக்கு அவ்வாறான

இதேவேளை குற்றச் செயல்களில் ஈடுபடும் நாடாளுமன்ற உறுப்பினரை பதவிநீக்குவதற்கான சட்ட ஏற்பாடுகளை அறிமுகப் படுத்தவேண்டிய தேவை உள்ளது என ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவின் பொதுசெயலாளர் சாகரகாரியவசம் தெரிவித்துள்ளார்.

எனினும் இதனை அரசமைப்பில் மாற்றங்கள் ஊடாகவே மேற்கொள்ளமுடியும் எனத் தெரிவித்துள்ள அவர் தற்போதைய சூழ்நிலையில் குற்றம்சாட்டப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் குறித்து குறிப்பிட்ட கட்சியின் தலைவர்களால் மாத்திரம் தீர்மானம் எடுக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.ஆனால் இதுவெற்றியளிக்கவில்லை. நாடாளுமன்ற உறுப்பினரை பதவியிலிருந்து நீக்குவதற்கு வழிவகுக்கும் அரசமைப்புமாற்றத்தைஅறிமுகப் படுத்தவேண்டும் எனவும் அவர்தெரிவித்துள்ளார். (05)



# மருதமுனை 65 மீற்றர் வீட்டுத் திட்டத்தில் தெருவிளக்கு பொருத்தும் திட்டம் ஆரம்பம்

(சர்ஜூன் லாபீர்)

அண்மையில் மக்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்ட மருதமுனை சுனாமி வீட்டுத் திட்டத்தில் உள்ள உள்ளக தெருக்களுக்கான மின் விளக்குகளை பொருத்தும் வேலைத்திட்டம் இன்று (திங்கட்கிழமை) மருதமுனை

ஜே.லியாகத் அலி, கல்முனை மாநகர பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம் அஸீம், பொறியியலாளர் ஏ.ஜ.ஜௌஸி, தொழில்நுட்ப உத்தியோகத்தர் எம்.அமீர் உடபடப் பலரும் கலந்துகொண்டனர். இந்த வீட்டுத் திட்டத்தில் ஏற்கனவே தனித் தனி வீடுகளுக்கான மின்சாரம்





சுனாமி வீட்டுத் திட்டத்தில் இடம்பெற்றது.

கல்முனை மாநகர சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம் அஸ்மி, கல்முனை பிரதேச செயலாளர்

வழங்கப்பட்ட நிலையில் தெருக்களில் உள்ள மின் விளக்குகள்இதுவரைகாலமும் இல்லாமையால் மக்கள் மிகுந்த சிரமங்களுக்கும், கஷ்டங்களுக்கும் உட்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (05)

# கலாபூஷணம் மீரா இஸ்டீன் மீண்டும் தலைவரானார்




(அகீல்)

அம்பாறை மாவட்ட உடகவியலாளர் சம்மேளனத்தின் புதிய தலைவராக கலாபூஷணம் மீரா எஸ்.இஸ்டீன் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்ட உடக வியலாளர் சம்மேளனத்தின் வருடாந்த ஒன்று கூடலும் வருடாந்த பொதுக் கூட்டமும் கடந்த ஞாயிற்றுக்கிழமை முழுநாள் நிகழ்வாக நடைபெற்றது. சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூஷணம் மீரா. எஸ்.இஸ்டீனின் தற்காலிக தலைமையிலும், செயலாளர் ஏ.ஜே. எம்.ஹனிபாவின் நெறிப்படுத்தலிலும், ஒலுவில் இஸ்மாயில் ஹாஜியார் (அஸீஸ்) தோட்டமண்டபத்தில் நிகழ்வுகள் நடைபெற்றன.

கிழக்கிலங்கையின் முதன்மை மிக்க ஊடக அமைப்பான அம் பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் செயற் பாடுகளை புதிய உத்வேகத்துடனும், வினைத்திறனுடனும் முன்னெடுப் பதற்கான பல்வேறு செயற்திட் டங்கள் நிகழ்வில் ஆராயப் பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டன

சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இடம்பெற்றபோது மீண்டும் தலைவராக சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூஷணம் மீரா எஸ் இஸடீன் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டதுடன் இத்தெரிவு மூலம் அவர் சம்மேளனத்தின் ஆயுட்காலத்தலைவராக செயற்படு வாரெனவும் உறுப்பினர்களின் ஏகோபித்த தீர்மானமாகவும் அறிவிக்கப்பட்டது.

தலைவர் மீரா இஸடீன் சுகயீனம் காரணமாக ஒரு சில வருடங்கள் தலைமைப்பதவியிலிருந்து விலகியிருந்த காலகட்டத்தில் சம்மேளனத்தின் செயற்பாடுகளில் ஏற்பட்டிருந்த தொய்வுநிலை குறித்து உறுப்பினர்கள் பலரும் கூடத்தில் கவலை வெளியிட்டனர்.

கடந்த 22 வருடங்களுக்கு மேல் மேற்படி சம்மேளனத்தின் ஆளுமையும், செயற்திறனும் மிக்க தலைவராக செயற்பட்டுவரும் சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூஷணம் மீரா எஸ். இஸடீன், கிழக்கில் பிராந்திய ஊடகவியலாளர்களின் நலன்சார் பல்வேறு வேலைத்திட்டங்களை சம்மேளனம் மூலம் முன்னெடுத்து வந்ததுடன், தேசிய மற்றும் கிழக்கு ஊடகவியலாளர்களைக் கௌரவிக்கும் பல முக்கியத்துவமிக்க நிகழ்வுகளையும் தமது அயராப் பெரு முயற்சியில் சிறப்புற நடத்தினார்.

கிழக்கிலங்கையின் சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூஷணம் ஏ.எல்.எம்.சலீமின் ஊடகத்துறை ஐம்பது கஆண்டுகள் நிறைவு விழாவை சம்மேளனம் சார்பில் பெருவிழாவாக நடத்தியதுடன்,

"பொன் விழாக்காணும் சலீம்" எனும் சிறப்பு மலரொன்றையும் வெளியிட்டமையும் அவரது ஆளுமை செயற்திறனுக்கு எடுத் துக்காட்டாகும்.

பிராந்திய ஊடகத்துறைக்கு பெருமை சேர்த்த பெரும் ஆளுமை யான கலாபூஷணம் மீரா எஸ். இஸடீன் மீண்டும் அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் தலைவராகத் தெரிவு செய்யப் பட்டுள்ளமை குறித்து பலரும் வாழ்த்துக் களைத் தெரிவித்து வருகின்றனர்.

மேலும் சம்மேளனத்தின் புதிய செயலாளராக சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.எம்.ஏ.சமட், பொருளாளராக இஸட். ஏ.எம்.றகு மான் ஆகியோரும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் சம்மேளன சிரேஷ்ட ஆலோசகர்களாக கலாபூஷணம் ஏ.எல்.எம்.சலீம், எஸ்.சிறாஜுடீன், எம்.ஐ.எம்.சம்சுடீன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

# நள்ளிரவில் மாடு திருடியவர் வவுனியாவில் மடக்கி பிடிப்பு

வவுனியாவில் முச்சக்கர வண்டியில் மாடு திருடிய இருவரை நாடாளுமன்ற உறுப்பினரும், ஊர் மக்களும் இணைந்து மடக்கிப் பிடித்து பொலிஸில் ஒப்படைத்த சம்பவம் நேற்று நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.

வவுனியா, சமயபுரம் பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் பயணித்த முச்சக்கர வண்டியை மறித்த மக்கள், குறித்த முச்சக்கர வண்டிக்குள் நான்கு கால்களும் கட்டப்பட்டு தலைகீழாக மாட்டை வைத்து அதனை ரபர் சீற்றால் சுற்றி கடத்திச் செல்வதை அவதா னித்துள்ளனர்.

உடனடியாக பொலிசாருக்கும், வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் அவர்களும் தகவல் வழங்கப்பட்டது. இதனையடுத்து இருபகுதியினரும் சம்பவ இடத்திற்கு சென்றிருந்தனர்.

மாட்டை முச்சக்கர வண்டியில் கொண்டு சென்றவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டதுடன், மாட்டை இறைச்சிக்காக வெட்ட கொடுப்பதற்கு கொண்டு சென்றதை அவர் மக்கள் முன்னிலையில் ஒப்புக்கொண்டும் இருந்தார்.

தொடர்ந்து இரவு ஒன்றரை மணிவரை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஊர் மக்களுடன் இணைந்து மாடு களவெடுப்பதற்கு துணை நின்ற மற்றொரு நபரையும் மடக்கிப் பிடித்து பொலிசில் ஒப்படைத்தனர்.

இதனையடுத்து கொண்டு செல்லப்பட்ட மாடு நெளுக்குளம் பொலிசாரால் மீட்கப்பட்டதுடன், சம்பவம் தொடர்பில் இருவரைக் கைது செய்த பொலிசார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத் துள்ளனர். (100)

# முன்னாள் போராளி விசாரணைக்கு அழைப்பு

வவுனியாவில் வசித்து வரும் முன்னாள் அரசியல் கைதி ஒருவரை விசாரணைக்கு அழைத்துள்ளது பயங்கரவாத




விசாரணைப் பிரிவினரால் (ரி.ஐ.டி) இன்று அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் வசித்துவரும் முன்னாள் அரசியல் கைதியான செல்வநாயகம் ஆனந்தவர்ணன் என்பவரையே நாளை காலை 9 மணிக்கு வவுனியாவில் அமைந்துள்ள பயங்கரவாத விசாரணை மற்றும் தடுப்பு பிரிவுக்கு சமூகமளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணை பிரிவின் பிரிவு 01 இன் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைக்கு அமைய வாக்குமூலம் ஒன்றை தருவதற்கு, 2023 ஆம் ஆண்டு 6 ஆம் மாதம் 7 ஆம் திகதி காலை 9 மணிக்கு பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் வவுனியா கிளைக்கு சமூகமளிக்குமாறு

அழைக்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(100)



# அமரர் சிவசிதம்பரத்துக்கு உடுப்பிட்டியில் இன்று அஞ்சலி

முன்னாள் பிரதி சபாநாயகரும் உடுப்பிட்டித் தொகுதி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அமரர் மு.சிவசிதம்பரத்தின் 21ஆம் ஆண்டு நினைவுதினம் இன்று அனுஷ்டிக்கப்பட்டது.

நெல்லியடி நகரில் அமைந் துள்ள சிவசிதம்பரத்தின் உருவச் சிலையடியில் நிகழ்வுகள் இடம் பெற்றன. இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பி னர் மாவை சேனாதிராசா, முன்னாள் மாகாணசபை உறுப்பினர் பா.கஜ தீபன் ஆகியோர் கலந்துகொண்டு




மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள். (03)

# அம்பலத்தடி பிள்ளையாரின் பிரமோற்சவ பெருவிழா

(வி.ரி. சகாதேவராஜா)

கல்முனையை அடுத்துள்ள நற்பிட்டிமுனை ஸ்ரீ அம்பலத்தடி விநாயகர் ஆலய வருடாந்த பிர மோற்சவ திருவிழா ஜூன் 17 கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

பத்து நாட்கள் திருவிழாக்கள் இடம்பெற்று ஜூன் 26 தீர்த்தோற்சவத்துடன் திருவிழா நிறைவு பெறும். ஜூன் 25 விநாயகப்பெருமான் முத்துச் சப்பரத்தில் எழுந்தருளி அருள் பாலிக்கவிருக்கிறார் என்று ஆலய



தனாதிகாரி எஸ்.இலங்கநாதன் தெரிவித்தார்.

# தியாகி சிவகுமாரனுக்கு அஞ்சலி

தியாகி பொன் சிவகுமாரனின் 49 ஆவது நினைவேந்தல் இன்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் உரும்பிராயில் உள்ள அவரது நினைவிடத்தில் இடம்பெற்றது.

சுடரேற்றி பொன் சிவகுமாரனது சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

அரசியல் வேறுபாடுகளின்றி பல்வேறு தரப்புகளாலும் முன் னெடுக்கப்பட்ட அஞ்சலி நிகழ்வில் அரசியல் தலைவர்கள், சிவில் சமூக தலைவர்கள் பொதுமக்கள் என பல்வேறு தரப்புகளும் கலந்து







கொண்டனர்.

பொன்.சிவகுமா ரன் ஈழவிடுதலைப் போராட்டவீரர்களில் ஒரு முன் னோடி ஆவார். யாழ்ப் பாணம், உரும்பி ராயில் காவற்துறை யினரின் சுற்றி வளைப்பில் நஞ் சருந்தி 1974 ஜூன் 5 உயிரிழந்தார்.

# தமிழ் மக்களின் விடுதலைப் பயணத்தில் மாணவர் சக்தியின் எழுச்சி அளப்பரியது

## சிவகுமாரன் நினைவேந்தலில் நிரோஷ்

தமிழ்த் தேசியத்தின் மீதான அடக்கு முறைகளுக்கு எதிராக உறுதியுடன் போராடிய முதல்வித்து பொன் சிவகுமாரன். மாணவர் எழுச்சியாக உருப்பெற்ற பொன் சிவகுமாரனின் பயணம் தமிழ் மக்களின் விடுதலை நோக்கிய போராட்டப்பாதையில் அத்திபார மாக அமைகின்றது. இவ்வாறு வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.



உரும்பிராயில் அமைந்துள்ள பொன் சிவகுமாரனின் நினை விடத்தில் முன்னர் இராணு வத்தினரால் உடைக்கப்பட்ட நிலையில் மீளபிரதிஸ்டை செய்யப் பட்டுள்ள பொன் சிவகுமாரனின் அஞ்சலி செலுத்திய பின் கருத்து ரைக்கையிலேயே அவர் இவ் வாறு தெரிவித்தார். சிவகுமாரன் அவர்களது தியாகம் எமது

விடுதலைப்போராட்டப் பாதையில் முக்கியமானது. தமிழ் மாணவர்களுக்கு அரசினால் இழைக்கப்பட்ட தரப்படுத்தல் அநீதி மற்றும் ஏயை ஒடுக்குமுறை கள் மற்றும் தேசத்துரோகங்களுக்கு எதிராக மாணவர்சக்தியாக துணிந்து போராடியவர்.

பொன் சிவகுமாரனின் தியா கம் என்பது தமிழ்த் தேசியத்தின் மீதானபற்றுதியுடனான போராட் டமாகும். அவருக்கான அஞ்சலி என்பது உறுதியான தமிழ்த் தேசிய பயணப்பாதையுடனேயே அமைய வேண்டும். சிவகுமார னின் விடுதலைப் பயணத்தில் அவர் காட்டிக்கொடுப்புக்களுக்கும் தேசத்துரோகங்களுக்கும் எதிராகப் போராடியுள்ளார். மேலும் காலத் திற்குக் காலம் தமிழ் மாணவர் களின் எழுச்சி என்பது எமது போராட்டத்தில் திடகாத்திரமான பங்களிப்பினை நல்கியுள்ளது.



சிவகுமாரன் அவர்கள் என்ன என்ன இலட்சியத்தினை கொண்டு தன் இன்னுயிரை ஆகுதியாக்கினாரோ அவரது இலட்சியத்திற்காகவும் அபிலாசை களுக்காகவும் நாம் திடமாகப் பயணிக்க வேண்டியவர்களா கவுள்ளோம். எம்போன்றோருக்கு அவரது தியாகமும் இலட்சியமும் எப்போதும் சுவடாக அமைகின்றது.

தடைகள் இருந்த சமயத்திலும் பல்வேறு இடர்பாடுகளைத் தாண்டியும் நாம் இங்கே அஞ்சலி செலுத்திவந்துள்ளோம். அண்ணன் சிவகுமாரன் அவர்களுடைய சிலைகள் கூட பல்வேறு தடவைகள் உடைக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே இராணுவத்தினரால் உடைக்கப்பட்ட, 1975 ஆம் ஆண்டு முத்துக்குமாரசுவாமியினால் திறந்துவைக்கப்பட்ட சிலை மண்ணுக்குள் புதையுண்டு காணப்பட்ட நிலையில் அதனை நான் தவிசாளராக பெறுப்பேற்ற உடன் மீள குறித்த வளாகத்திற்குள் பிரதிஸ்டை செய்திருந்தேன்.

அவ்வாறு பிரதிஸ்டை செய்யப் பட்ட இடத்திலேயே தற்போது அஞ் சலி செய்துள்ளேன்.

வரலாற்றை நாம் ஆவணப் படுத்த வேண்டும் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னால் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

# மாடியில் இருந்து தவறி விழுந்து சீனப் பொறியியலாளர் இறப்பு

கொழும்பு, கொம்பனி வீதியில், யூனியன் பிளேஸில் நிர்மாணிக்கப்பட்டு வரும் வீட மைப்புத் தொகுதியின் 8 ஆவது மாடியில் இருந்து தவறி விழுந்து சீனப் பிரஜை ஒருவர் உயிரி ழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உதவிப் பொறியியலாளராகப் பணியாற்றிய 24 வயது சீனப் பிரஜையே இவ்வாறு சாவடைந் துள்ளார்.

நேற்று மாலை 5 மணிய ளவிலேயே இவர், கட்டடத்தில் இருந்து தவறி விழுந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

படுகாயமடைந்த சீன இளைஞர், கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந் துள்ளார். (02)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நுகர்வோர் அதிகாரசபையின் விசனம் தரும் செயற்பாடு

கழுதை தேய்ந்து கட்டெறும்பானது போன்ற கதைதான் நுகர்வோர் வீவகார அதிகார சபையின் செயற்பாடாக இருக்கின்றது. இந்த அதிகார சபை நுகர்வோரின் உரிமைகளை நிலைநாட்டுவதற்காக உருவாக்கப்பட்டது. வர்த்தகர்களால், வாணிபர்களால், சேவை வழங்குநர்களால் நுகர்வோர் ஏமாற்றப்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக இந்த அதிகார சபை உருவாக்கப்பட்டது. எந்தவொரு நுகர்வோரும் தான் வாங்கிய ஒரு பொருள் குறித்து அல்லது வர்த்தகர் குறித்து தனக்கு ஏற்பட்ட பிரச்சினைனை இந்த அதிகார சபையிடம் முறையிட்டுத் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இருப்பினும் இந்த அதிகார சபையின் செயற்பாடு தொடர்ச்சியாக மிக மோசமான சரிவைச் சந்தித் திருக்கின்றன என்று காட்டுகின்றன புள்ளிவிவரங்கள். 2017ஆம் ஆண்டு 25 ஆயிரத்து 605 திடீர் சோதனைகளை அதிகார சபை நடத்தியிருக்கிறது. அதுவே 2018இல் 23 ஆயிரத்து 532ஆக அந்த எண்ணிக்கை குறைந்தி ருக்கிறது. 2019இல் அது சற்று அதிகரித்து 24 ஆயிரத்து 61ஆக உயந்துள்ளது. ஆனால் 2020 அது வெறும் 15 ஆயிரத்து 923ஆக வீழ்ச்சியடைந்தது. கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் விலைகள் அதிகரித்தது மட்டுமல்லாமல் நுகர்வோரின் உரிமைகள் கண்டபடி மீறப்படுகின்றன என்ற கண்டனம் கடுமையாக முன்வைக்கப்பட்ட காலத்தில் இந்த வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அதற்கு அடுத்த ஆண்டான 2021 வெறும் 9 ஆயிரத்து 494 திடீர் சோதனை நடவடிக்கைகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தச் சரிவுக்கு என்ன காரணம் என்பதும் தெரியவில்லை.

பணவீக்கம் பெருமளவு அதிகரித்து கடைக்காரர்களும் வர்த்தகர்களும் சகட்டு மேனிக்கு விலைகளை உயர்த்து நுகர்வோர் உரிமையைக் காலில் போட்டு நசுக்கிக் கொண்டிருந்த காலமான 2021 அதிகார சபைக்குக் கிடைக்கப்பேற்ற 8 ஆயிரத்து 56 முறைப்பாடுகளில் வெறும் 816 முறைப்பாடுகள் பற்றி மட்டுமே அதிகார சபையினால் திடீர் சோதனைகளை நடத்தியுள்ளது. 2 ஆயிரத்து 646 முறைப்பாடுகள் தொடர்பில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவேயில்லை.

இதேயாண்டில் அதிகார சபையின் வழக்கமான திடீர் சோதனை நடவடிக்கையும் அதற்கு முன்னைய – கொரோனா – ஆண்டைவிட 40 சதவீதம் வீழ்ச்சி அடைந்துள்ளது. இந்தப் புள்ளிவிவரங்களை கணக்காய்வுப் பணிப்பாளர் நாயகம் அலுவலகம் தனது அறிக்கையில் வெளிப்படுத்தியுள்ளது.

இவ்வாறு நுகர்வோர் உரிமைகளைப் பேணுவது தொடர்பில் அதிகார சபை மிக மோசமாகச் செயற்பட்டால், இந்தச் சபை இருந்து என்ன பயன்? 2013ஆம் ஆண்டு நுகர்வோர் தமது முறைப்பாடுகளைத் தொலைபேசியின் மூலம் அறிவிக்கலாம் என்று 1977 இலக்கமும் அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கென மட்டும் 9 மில்லியனுக்கும் அதிகமான ரூபாய் பணம் செலவிடப்பட்டது. அப்படியிருந்தும் நுகர்வோரால் தெரிவிக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் அதிகார சபை நடவடிக்கை எடுப்பது வீழ்ச்சியடைந்திருப்பது விசனத்தை ஏற்படுத்துகின்றது. கண்டிக்கத்தக்கது.

நாடு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்டிருந்தபோது மக்கள் தமது விலைவாசி உயர்வுகளாலும் பொருட்கள் தட்டுப்பாட்டாலும் அதிகம் பாதிக்கப்பட்டுவந்தநிலையில்முன்னரிலும்பார்க்கஇன்னும் அதிகமாகச் செயற்பட்டு நுகர்வோரின் பாதுகாப்பையும் உரிமையையும் நிறைவேற்றியிருக்கவேவண்டிய அதிகார சபை அதற்கு நேர் எதிர்மாறாகச் செயற்பட்டிருப்பதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இனிமேலாவது இந்த நிலையில் மாற்றம் வரவேண்டும். நுகர்வோரின் – பாவனையாளர்களின் – உரிமைகளை நிலைநிறுத்த அதிகார சபை தன்னை அர்ப்பணித்து முழுமையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

## குருமன்காடு குள ஆக்கிரமிப்பினால் நேற்று இரு தரப்புகளிடையே பதற்றம்



வவுனியா, குருமன்காடு பகுதியை அண்மித்த குளத்து நீரேந்து பிரதேசத்தை கையகப்படுத்தும் வகையில் சிலர் முன்னெடுத்த நடவடிக்கை காரணமாக அங்கு இரு குழுக்களுக்கிடையே பதற்றம் ஏற்பட்டது. பொலிஸார் தலையீட்டு அமைதியை ஏற்படுத்தினர்.

நேற்றுக் காலை முதல் மதியம் வரை இடம்பெற்ற இவ்முரண்பாடு தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, குருமன்காடு பகுதியை அண்மித்த பட்டானிச்சூர் புளியங்குளத்தின் நீரேந்து பிரதேசத்தை விடுமுறை நாட்களில் சிலர் கையகப்படுத்தி வேலி அடைத்து வந்திருந்தனர்.

இதனையடுத்து, 2011 ஆம் ஆண்டின் கமநல அபிவிருத்தி சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 2000ம் ஆண்டு 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 83 ஆம் பிரிவின் பிரகாரம் பட்டானிச்சூர் புளியங்குளத்தின் சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட வேலியினை அகற்றுவதற்கான கட்டளை வவுனியா கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் மாவட்ட பிரதி ஆணையாளர் பா.தேவரதனால் 08.05.2023 அன்று

பிறப்பிக்கப்பட்டது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அதில், வவுனியா கோவில்குளம் கமநல அபிவிருத்தி திணைககள பிரிவில் அமைந்துள்ள பட்டாணிச்சூர் கமநலசேவை நிலையத்தின் அதிகாரத்திற்குட்பட்ட பட்டானிச்சூர் புளியங் குளமானது கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு சொந்தமான அளவை செய்யப்பட்டு



எல்லைக்கற்கள் இடப்பட்டுள்ள குளமாகும்.

2013 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம் 6 ஆம் திகதி அரச விடுமுறை தினங்களில் (இரவு நேரத்தில்) பட்டாணிச்சூர் புளியங்குளத்திற்குள் உள் நுழைந்து குளத்திற்குரிய ஒதுக்கீட்டுப் பிரதேசத்தில் விரோதமான முறையில் இனம் தெரியாதோர்களால் வேலி அடைக்கப்பட்டுள்ளதை அவதானிக்கப்பட்டுள்ளது. அதனால்

2011 ஆம் ஆண்டின் கமநல அபிவிருத்தி சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 2000ம் ஆண்டு 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 38(4) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட்ட 83(1) இன் பிரகாரம் அடைக்கப்பட்டவர்களாலே சட்ட விரோதமாக அடைக்கப்பட்ட வேலியை 22.05.2023 ஆம் திகதிக்கு முன்பு உடடியாக அகற்றவேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

அகற்றதவறின் 22.05.2023 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு பின்னரான தினத்திலோ கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர், கோவில்குளம் கமநல சேவை நிலையம் என்பவரால் பொருத்தமான நிறுவனங்களின் உதவியுடன் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் அதற்கு செலவான நிதி உரிய சட்ட விரோத வேலியடைப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட நபர்களிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் பிறப்பிக்கப்பட்ட கட்டளையில் தெரிவிக்கப்பட்டிருந்தமையுடன் வவுனியா பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அப்படியிரருந்தும் நேற்றுக் காலை குளத்தின் நீரேந்து பகுதியில் அமைந்துள்ள பள்ளிவாசல் சமூகத்தினர் இணைந்து சட்ட விரோதமான முறையில் வேலி அமைக்கப்பட்ட பகுதியினுள் துப்புரவுப் பணியில் ஈடுபட்டனர், மரக்கன்றுகளையும் நாட்ட முனைந்தனர்.

இதன்போது, வவுனியா மாவட்ட கமக்கார சம்மேளனங்களின் தலைவர் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து குறித்த பகுதியின் சுத்தப்படுத்தும் நடவடிக்கையினை நிறுத்துமாறு தெரிவித்திருந்தார். எனினும் தொடர்ந்தும் சுத்தப்படுத்தும் நடவடிக்னக முன்னெடுக்கப்பட்டமையினால் தமிழ் இளைஞர்கள் அவ்விடத்தில் ஒன்று கூடி எதிர்ப்பினை தெரிவித்திருந்தனர்.

இதனால் அவ்விடத்தில் பதற்றம் ஏற்பட்டது. சில மணிநேர குழப்ப நிலமையினையடுத்து நிலமையினை வவுனியா பொலிஸார் தலையிட்டு அமைதியை ஏற்படுத்தினர். இரு தரப்பினரையும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச்சென்று இருவரிடமும் முறைப்பாட் டினைப் பெற்றனர். இவ்விடயத்தினை நீதிமன்றிக்கு எடுத்துச் செல்வதற்குரிய நடவடிக்கையினை பொலிசார் முன்னெடுத்துள்ளனர். (100)

## சுற்றுச்சூழல் தினத்தையொட்டி இன்று மட்டு. நகரில் விழிப்புணர்வுப் பேரணி

(பழுவூரான்)

சர்வதேசசூழல்பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு, இன்று திங்கட்கிழமை மட்டக்களப்பில் சிறப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன.

தொடக்க நிகழ்வாக சைக்கிள் பூங்காவிலிருந்து ஆரம்பமான நடைபவனி காந்திப் பூங்கா வளாகத்தை வந்தடைந்தது. அங்கு சர்வதேச சூழல் பாதுகாப்பு தினத்தை ஒட்டி நிருமாணிக்கப்படவுள்ள விழிப்புணர்வுத் தூபிக்கான அடிக்கலை சமயத்தலைவர்கள், பிரமுகர்கள் மற்றும் மாணவர்கள் நட்டனர். பின்னர் அங்கிருந்து ஆரம்பமான நடைபவனி சாள்ஸ் மண்டபத்தை வந்தடைந்து.




மட்டக்களப்பு கரித்தாஸ் எகெட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்விற்கு அதன் இயக்குனர் அருட்தந்தை ஏ.யேசுதாசன் தலைமை தாங்கினார். மட்டக்களப்பு அனுமார் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ஜெகதீஸ்வரன் குருக்கள், மட்டக்களப்பு பெரிய பள்ளியைச் சேர்ந்த மியாஸ் மௌலவி, கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த அருட்தந்தை ஜீட்நிக்லஸ், ஜயந்திபுர விகாரையின் விகாராதிபதி கதறகம கதகெதற தேரர், மத்தியசுற்றாடல் அதிகாரசபை உதவி இயக்குநர் எஸ். கோகுலன், கரித்தாஸ் ஸ்ரீலங்கா சூழல் பாதுகாப்புத் திட்டத் தலைமை அதிகாரி எம்.சஜித் சில்வா, மட்டக்களப்பு மறை மாவட்டக் குரு முதல்வர் அருட்தந்தை ஜி.அலெக்ஸ் றொபேட், எகெட் நிறுவன அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், சர்வதேச சூழல் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியோருக்குப் பரிசில்களும் அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டன.





